விலை ரூபா 2.00 ★ 12 பக்கங்கள்

ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 புரட்டாதி 13 முஹறம் 13 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (29—9—85) இதழ் 231

★ வறுமையின் கொடுமை:

ஒரு குடும்பமே நஞ்சுக்குப் பலி!

[வேலணை]

இரண்டு வயதுக் குழந்தை உட்பட நான்கு குழந்தைகளும் தாயும் தந்தையும் நஞ்சுக்குப் பலியானார்கள் [12ம் பக்கம் பார்க்க]

ஈ. தே. வி. மு. சமரசப் பேச்சில்

மீண்டும் பங்குபற்ற இணக்கம்!

போர்நிறுத்தக் கண்காணிப்பில் தமது பிரதிநிதிகளைச் சேர்க்கவும் வலியுறுத்து!!

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பான மூன்றுவது கட்ட சமரசப் பேச்சுக்களில் கலந்துகொள்ள 'ஈழ தேசிய விடுதலை முன்னணி' சம்மதம் தெரிவித்துள்ளது இப் பேச்சுக்களில் இலங்கையில் போர் நிறுத்தம் குறித்த விடயங்களுக்கே ஆரம்பத்தில் முதன்மை அளிக்கப்படும் எனவும் ஈ. தே வி முன்னணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈ தே. வி மு வின் இந்த அறிவிப்பை பி. டி. ஐ. செய்தி ஸ்தாபனம் வெளியிட்டுள்ளது.

முதல் இருகட்டப் பேச்சுக்களும் பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில் இடம்பெற்றன பின்னர் இலங்கை அரசதரப்பினருக்கும், தமிழ்க் குழுக்களுக்குமிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடால் இச்சமரசப் பேச்சுக்கள் தடைபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

மூன்றுவது கட்டப் பேச்சுக்களின் ஆரம்பத்தில் இலங்கையில் போர்நிறுத்தம் குறித்தே முக்கியமாக ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு தமிழ்த்தீவிரவாதக்குழுக்களுடன் கடந்த 18ந்திகதி முதல் யுத்தநிறுத்தத்தை நீடிப்பது குறித்து முறையான ஒப்பந்தங்கள் எதனையும் செய்துகொள்ளவில்லை

இலங்கை அரசின் இப்போர்நிறுத்தம் ஒரு தரப்பாகவே நீடித்துள்ளதாகவும் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ரொமேஷ் பண்டாரி கேட்டுக்கொண்டதற் கிணங்க ஒரு இடைக்கால ஏற்பாடாகவே யுத்த நிறுத்தத்தை தாம்

(12-ம் பக்கம் பார்க்க)

"இலங்கைத் தமிழ்ப் போராளிகளை அவதூறாகப் பேசவில்லை!

— பண்டாரி

(சென்னை)

"இலங்கைத்தமிழ்ப்போராளிகளின் பிரதிநிதிகளை 'யூஸ்லெஸ் ஃபெலோஸ்' என்று நான் அவதூறாகப் பேசியதாகத் தெரிவிக்கப்படுகின்றது ஆனால் இம்மாதிரியான வார்த்தைகளையெல்லாம் நான் தவறிப் போய்க்கூடப் பாவிப்பது கிடையாது. என்று இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ரொமேஷ் பண்டாரி தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போராளிக் குழுக்களுக்கும் திரு. பண்டாரிக்குமிடையே சூடான பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன. அப்போது அவர் காரசாரமாகக் குழுவினரைப் பேசிவிட்டதாக இந்தியப் பத்திரிகைகள் பல கருத்துவெளியிட்டன

இக்கருத்துக்களை மறுக்கும் வகையிலேயே திரு. பண்டாரி மேற்கண்டவாறு குறிப்பிட்

(12ம் பக்கம் பார்க்க)

யாழ். வர்த்தக சங்கத்தின் கோரிக்கை

யாழ்ப்பாணம் வீடியோ பிரசாத்தில் கடமையாற்றும் சேனாதிராசா இராமநாதன் அவர்களை விடுவிக்குமாறு கோரி 26-9-85ல் சம்பந்தப்பட்டவர்களிடம் விடுத்த வேண்டுகோள் இதுவரை யாரும் செவிசாய்க்காதமையினால் 30-09 85 திங்கட்கிழமையில் இருந்து அவரை விடுவிக்கும்வரை கடைகளைப் பூட்டி முழு ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு யாழ் வர்த்தர்களின் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம் சம்பந்தப்பட்டவர்கள் இராமநாதனை விடுதலை செய்து உரியவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயற்குழு
யாழ் வர்த்தகர் சங்கம்

28-09-85. 990

திருமலைநகரை சுற்றி வளைத்து சோதனை: 50 பேர் கைது!

[திருகோணமலை]

திருகோணமலை நகரம் நேற்று அதிகாலை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு சுமார் 1000 பேர் கைதுசெய்யப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். விசாரணையின் பின் 50 இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டு, மற்றையோர் விடுதலைசெய்யப்பட்டனர்.

12 கவச வாகனங்களிலும், 10 இ போ ச. பஸ்களிலும் வந்த இராணுவத்தினர் இச்சோதனையை நடத்தினார்கள்

இதுகுறித்து திருமலை பிரஜைகள் கொழும்பு பிரஜைகள் குழுவுக்கு புகார்செய்துள்ளனர்.

கைதான 50 இளைஞர்களும் கோட்டை கடற்படை முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். (மா)

விடுதலை செய்யுமாறு

சிபார்சு செய்யப்பட்டோர் இதுவரை விடுதலை இல்லை!

(கொழும்பு)

"சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யுமாறு சிபார்சு செய்யப்பட்டவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. இவர்களை விடுதலை செய்யுமாறு ஆலோசனைச் சபை சிபார்சு செய்திருந்தது

தேசிய பந்தோபஸ்து அமைச்சின் செயலாளர் திரு ஏ. பி ஹபுதேனியாவிற்கு வடபகுதி பிரஜைகள் குழுக்களின் இணைப்புகுழுத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி சமர்ப்பித்த மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அம்மகஜரில் கீழ்க்காணும் குறைபாடுகளை தீர்க்கஉடனடியாகத்தக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

○ ஆலோசனைச்சபையினால் விடுதலை செய்யுமாறு சிபார்சு செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யாமை.

○ 18 மாதங்களுக்கு மேல் தடுப்பு காவலில் உள்ளவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யாமலோ அல்லது தொடர்ந்தும் காவலில் வைத்திருப்பது - தற்போது அவசரகாலச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் தொடர்ந்துவைத்திருப்பது

○ 18மாதங்களைக் கணக்கிடும் போது பல்வேறு இராணுவ முகாம்களில் வைத்திருந்ததைச் சேர்த்துக்கொள்ளாமை ஆகிய

(12ம் பக்கம் பார்க்க)

★ காதலுக்குத் தடை

ஊர்காவல் படை துப்பாக்கியால் தற்கொலை!

(திருமலை)

காதலுக்கு தடை ஏற்பட்ட [illegible] திரமடைந்த யுவதி ஒருவர் ஊர்காவல்படை வீரரின் துப்பாக்கியால் சுட்டுத்தற்கொலை செய்து கொண்டார்

ஊர்காவல்படை வீரர் சமரசூரியாவின் (47வயது) மகளான சரோஜா புஸ்பகாந்தி (20 வயது) இளைஞர்ஒருவரைக் காதலித்தாரென்றும் அதற்கு தந்தை எதிர்ப்புக்காட்டவே தந்தையின் அத்துப்பாக்கியினால் தன்னைச்சுட்டு தற்கொலை செய்துகொண்டதாகவும்கூறப்படுகிறது

இச்சம்பவம் திருகோணமலை மாவட்டத்தில் கடந்தவாரம் இடம்பெற்றது

இதேவேளை கிழக்கு மாகாணப் பகுதியில் ஊர்காவல் படைகளுக்கென வழங்கப்பட்ட துப்பாக்கிகள் துஷ்பிரயோகம்செய்யப்பட்டு வருவதும், ஊர்காவல்படை வீரர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்யாது வருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியில் இராணுவ விஸ்தரிப்பு?

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் இராணுவ விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள், கடைகளை விட்டு பொதுமக்களை வெளியேறுமாறு மிரட்டப்படுவதாகவும், சிலகடைகள் உடைக்கப்பட்டுள்ளதாகவும் ஈ பி ஆர். எல் எவ் இன் 'ஈழம் செய்திப் பலகை'' சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

திருகோணமலையில் கலிப்பட்டாணம் தேடுதல்வேட்டை!

(12-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

ஏராளமான ஆங்கில, தமிழ் நாவல்கள், புத்தகங்கள் மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: R. பாலசுப்பிரமணியம், 125, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (978)

ஆறு வாரங்கள் நிரம்பிய அழகான இரண்டு பேரமரேனியன் பெண் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. (Wormed and Weaned) தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: சென்ற். பீற்றஸ் லேன், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [956]

8 ஸ்ரீ இலக்க வொக்ஸ் வெகன் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இலக்கம் 950, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (950)

7 ஸ்ரீ, 2 ஸ்ரீ வோக்ஸ்வகன், T V, டெக், காஸ்குக்கர், அவுண் உடன், மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு பைலட் இன்ஸ்ரிடியுட், 151, செம்மணி றோட், நல்லூர். [974]

இருபாலையில், மூன்றும் கட்டையடியில், மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தேவமனோகரன் வசந்தமலர், டிஸ்பென்ஸரி வீதி, கல்வியங்காடு. [973]

புத்தம் புதிய சிங்கர் தையல் மெஷின் (தாய்வான்) 220V - 50 H2 / 75 W Lamp Max 15W விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: நிக்கோ ஹோட்டல், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 975

(1) நாவற்குழியில் நல்ல சுற்றாடலில் வீடு கட்டுவதற்கு நிலம் உண்டு. (2) நல்லூரில் வீடுஉண்டு தொடர்புகொள்ளவும்; Taxman, மே/பா ராஜ் கோபால் கட்டிடம், 55½, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 976

கல்வி

I. C. M. A. வினா விடைகள். Section A and B நவம்பர் 84. ரூபா 5/-. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (913)

தேவை

வேளாளர் குலத்தைச் சேர்ந்த நற்குணங்கள் நிரம்பிய பெண் உதவியாளர் தேவை. வீட்டுப்பராமரிப்பும், வீட்டுவேலைகளில் ஒத்தாசை புரிவதற்கும் எல்லா நாட்டு பாஸ்போட்டுடன் விண்ணப்பிக்கவும். நியாயமான சம்பளம் கொடுக்கப்படும். விளம்பர இலக்கம் 940, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [940]

அச்சுக்கோர்ப்பதில் மூன்று வருட அனுபவமுள்ள பெண் ஊழியர் வெற்றிடமுள்ள அச்சகத்தில் வேலை தேடுகிறார். சம்பள விபரங்களுடன் எழுதவும். விளம்பர இலக்கம் 941, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (941)

மிக நல்ல நிலையில் உள்ள Vespa ஸ்கூட்டர் தற்போதைய விலையில் உடனடியாக தேவை. விலை. நிறம், நம்பர், எதிர்பார்க்கும் விலை உடன் அறியத்தரவும். தொடர்பு கொள்க:- A. ஸ்ரீதரன், இலங்கை மின்சாரசபை, பிரதேச அலுவலகம், சுன்னாகம். 933

ஒரு வீட்டில் உள்ள தனியான பெண் ஒருவருக்கு சமையல் வேலையும் வீட்டு வேலையிலும் உதவியாய் இருப்பதற்கு ஒரு நடுத்தர வயதுப்பெண் தேவை. உணவுடன் தகுந்த சம்பளமும் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்; விளம்பர இல: 80 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 980

வாடகைக்கு

யாழ். கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் தொலைபேசி தொடர்பு உட்பட சகல வசதிகளுடன் கூடிய 9 அறை வீடு உடன் வாடகைக்குண்டு. வியாபார நிறுவனங்களுக்கும் உகந்தது. விபரங்களுக்கு; 83, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [963]

கஸ்தூரியார் வீதியில் No: 76, அமைந்துள்ள மேல்மாடி கட்டிடம் வாடகைக்கு விடப்படும். விஸ்தீரணம்; 2,000 சதுரஅடி. தொடர்பு: புதிய தமிழ்மாளிகை No: 76, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். 960

மணப்பந்தல்

யாழ்ப்பாண இந்துவேளாள சமூகத்தைச் சேர்ந்தவரும் சவுதியில் வேலைபார்ப்பவரும், 42 வயதும், அழகுள்ளவரும், செவ்வாய் தோசமற்ற தமது மகனுக்கு, நன்கு படித்தவரும், நல்ல அழகுமுள்ள 35 வயதுக்குட்பட்டவருமான பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். சீதனம் மற்றும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: விளம்பர இலக்கம் 912, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 912

யாழ்ப்பாண இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த மாதம் ரூபா 1000க்கு மேற்பட்ட வருமானம் பெறும் அரசாங்க உத்தியோகத்தருக்கு, 22—27 வயதுக்குட்பட்ட படித்த மணப்பெண் தேவை. சாதக விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். மங்கள ஏஜென்ஸி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (939)

இங்கிலாந்தில் ஸ்தாபனம் வைத்து நடத்தும் யாழ். உயர் அந்தஸ்திலுள்ள இந்து வேளாளர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு, பெற்றோர் 30வயதுக்குட்பட்ட ஆங்கிலம் தெரிந்த சிவந்த, அழகிய, பண்புள்ள மணமகளை எதிர்பார்க்கிறார்கள். மணம் முடிந்து இங்கிலாந்து செல்லக் கூடியவர் விரும்பத்தக்கது. குடும்ப மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும், புகைப்படம் திருப்பி அனுப்பி வைக்கப்படும். விளம்பர இல. 881, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 881

சேவை

28; 29; 30-9-85ல் அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரியில் நடைபெறும் பொருட்காட்சியில் மிக்கவைற் விளம்பர விற்பனைக் காட்சிச் சாலையில் ரூபா 15/-ற்கு மிக்கவைற் தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய ஸ்ரிக்கர், பொலித்தீன்பாக், அறிவுநூல்கள், மிக்கவைற் செய்தி, வீட்டுத் தோட்டத்திற்குரிய விதைகள் யாவும் இலவசமாக வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதிவாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம். மிக்கவைற் — யாழ்ப்பாணம். (970)

கணக்கெழுதுதல் (English and Tamil). கணக்கில் ஏற்பட்டுள்ள தவறுகளைக் கண்டுபிடித்தல். மேலதிக விபரங்கட்கு நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும்: T. Somaskanthar, 471/1, Kankesanthurai Road, Vannarponnai, Jaffna. (874)

வைத்தியம்

மனநோய், கழலை, கட்டிகள், சர்மரோகங்கள், அல்சர் எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் எம். வி. இலங்கைசந்திரன், Reg: Homoeopath, 218/5, பலாலிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 825

சேவை

பெரும்பரப்பில் கனிவகைப் பயிர்ச் செய்கை, கோழி வளர்த்தல், பால் பண்ணை பராமரித்தல் ஆகியவை இலாபகரமாக இயக்குவதற்கு நெடுங்கால விவசாய அனுபவமிக்கவர்கள் தேவையா? தொடர்பு: விளம்பரஇல 752, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 752

யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

(வரையறுத்தது)

பதவி வெற்றிடம்

கிளை முகாமையாளர்

மேற்படி பதவிக்கு யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 10-10-85.

பதில்
பொதுமுகாமையாளர்.
[948]

முதல் சந்தர்ப்பத்து முற்றான கட்டளையின்

அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட
நீதிமன்றம்

சாவகச்சேரி கச்சாய் வீதியைச்சேர்ந்த காலஞ்சென்ற வள்ளிநாயகி இராமச்சந்திரனின் மரணசாதனச் சொத்து சம்பந்தப்பட்ட விடயம்.

— காலஞ்சென்றவர்.

இலக்கம்: 231/T
அத்துடன்

1977இன் 20ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட சிவில் நடைமுறைக் கோவை (அத். 101) இன் 518, 529 ஆகிய இலக்கப் பிரிவுகளின் கீழ் செய்யப்படும் விண்ணப்பம் சம்பந்தமானவிடயம்.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த கனகசுந்தரம் இராமச்சந்திரன் ஜெயகுமார்.

மனுதாரர்

மேற்பெயரிட்ட காலஞ்சென்றவரின் மரணசாதனத்தின் நிரூபணத்துக்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே முதற் சந்தர்ப்பத்து முற்றான கட்டளை 1985 ஆடி 19ம் திகதி பிறப்பிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1985 புரட்டாதி 6ம் திகதி பாரிய இன்று.

நீதிமன்றக்கட்டளைப்படி

ஆ. குணநாயகம்,
பதிவாளர்.

தயாரித்தது:
K. Packiyalingam,
மனுதாரரின் சட்டத்தரணி.
702

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டைப் பகுதியில் கடந்த 23ம் திகதி ஒரே இரவில் நடைபெற்ற பல லட்ச ரூபா பெறுமதியான கொள்ளைகளைக் கண்டித்து பலவிடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தேவை

தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்கள் உடன் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும்: இல.28, 2 வதுஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 986

விளம்பரதாரர் கவனத்துக்கு!

'ஈழநாடு' பத்திரிகையில் அடுத்த நாள் வெளிவரவேண்டிய விளம்பரங்கள், பகல் 11-30 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை விளம்பரதாரர்கள் கவனத்தில் கொள்ளவும்.

இதன் பின்னர் வரும் விளம்பரங்கள் அடுத்தநாள் பத்திரிகையில் வெளிவர வேண்டுமானால், மேலதிகக் கட்டணம் செலுத்த வேண்டும்.

நிர்வாகி
'ஈழநாடு'

பின்னுறுதிக் கட்டளை பற்றிய

அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றத்தில்

தெல்லிப்பளை வறுத்தலைவிளானைச் சேர்ந்து காலஞ்சென்ற செல்வமாணிக்கம் மாயவன் என்பவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன)
நியாயாதிக்கம்) இல ரி/227

செல்வமாணிக்கம் கைம்பெண் அற்புதம் "கலைச்சோலை" வறுத்தலைவிளான், தெல்லிப்பளை.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2ம் திகதி (2/10/1985 முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ம் திகதி.

கோட்டுக் கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்

வரைவு:
க. குணரத்தினம்
மனுதாரரின் சட்டத்தரணி.
[489]



வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

பேரறிஞர் பேட்ரண்ட் ரஸ்ஸலின்

சுயாட்சி பற்றிய சிந்தனைகள்

தொகுப்பு: வி எஸ். மணி

பேட்ருண்ட் றஸ்ஸல் (Bertrand Russell 1872 - 1970) ஒரு தத்துவவித்தகர். சுயசிந்தனையாளர். கணிதவியல் மேதை கல்விமான், பகுத்தறிவுவாதி. உலக அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தவர், சர்வதேச சமாதானத்துக்காகப் பாடுபட்டவர் அவருடைய எழுத்துக்களினால் உலகம் பூராவும் உள்ள கோடிக்கணக்கான வாசகர்கள் அறிவுத் தெளிவு பெற்றுள்ளார்கள்.

ஐன்ஸ்டீன் (Albert Einstein) போன்ற மேதாவிகள் அவருடைய கருத்துக்களை ஏற்றுப் போற்றியுள்ளார்கள். சர்வதேச சமாதானத்தைப் பேணிக் கொள்வதில் ஜனாதிபதி கெனடியும் பிரதமர் குருசேவும் வகிக்கவேண்டிய பங்கினைக் குறித்து அவ்விருதலைவர்களுடனும் அவர் கடிதத்தொடர்பு கொண்டிருந்தார். 1950ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு றஸ்ஸல் பிரபுவுக்கே வழங்கப்பட்டது.

'அரசியல் குறிக்கோள்கள். [Political Ideals-1917], ''மெய்விடயமும் புனைகதையும்'' [Facts and Fiction - 1961] ஆகிய இரு நூல்களிலும் றஸ்ஸல் சுயாட்சியைப்பற்றி எழுதியுள்ளார். அவருக்கு இந்த விடயத்தைப்பற்றி எழுதுவதற்கு அக்கறை உண்டு. அத்துடன் அவர் தமக்கே உரியபாணியில் மிகவும் துலக்கமாக எழுதியிருக்கிறார். ஆதலால் எமது தலைப்புக்கு ஏற்புடைய கூறுகள் மேலதிக விளக்கம் எதுவுமின்றி அப்படி. அப்படியே கீழே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

அரசியல் குறிக்கோள்கள்

''ஒரு சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் எந்தப் பிரிவினரதும் ஆசா பாசங்கள், ஏனைய பிரிவினரின் ஆசா பாசங்களிலிருந்து பெரிதும் வேறுபடுமாயின், அவர்கள் தமது உள் விவகாரங்களைத் தாமே தீர்த்துக்கொள்ளும் சுதந்திரம் படைத்தவர்களாக விளங்குதல் வேண்டும்; ஜனநாயகம் நிலைபெறுவதற்கு இத்தகைய சுதந்திரம் அத்தியாவசியம்.''

''ஜனநாயகம் என்பது, அரசாங்கம் பொதுமக்களின் சுதந்திரத்தில் தலையிடுவதை இயன்றளவு குறைப்பதற்கான ஓர் உபாயமாகும். அதுவே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் தலைசிறந்த உபாயமாகும் ஒரு தேசத்தவர் இரு பிரிவினராகப் பிரிந்திருப்பின் அந்த இரு பிரிவினரும் தம்மிடையே ஒத்துப்போக முடியாவிடின், ஜனநாயகக் கோட்பாட்டின்படி பெரும்பான்மையோர் தம்எண்ணப்படி செயற்படலாம். ஆனால் பெருமளவு சுயாட்சி அளிக்கப்படாத நிலையில் ஜனநாயகம் என்பது எவ்விதத்திலும் ஒரு திருப்திகரமான உபாயமாக விளங்கப்போவதில்லை. பெரும்பான்மையோருக்கு ஒருமைப்பாட்டில் ஒரு பிரியமும், தலையிடுவதில் பேரின்பமும், வேறுபட்ட போக்குவாக்குகள்மீது வெறுப்பும் இருக்கும் ஆகையால் தமக்கு உண்மையிலேயே சம்பந்தம் இல்லாத விடயங்களில் அவர்கள் சிறுபான்மையோரைப் பெரிதும் கட்டுப்படுத்த முற்படுகின்றார்கள்.''

''ஆட்சி அதிகாரம் உத்தியோகத்தர்களின் கைகளையும் கைத்தொழில் அதிபர்களின் கைகளையும் சென்றடைதலாகாது. மாறாக. அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஆட்சி அதிகாரத்தைப் பரவலாக்கினால், ஆணையிடும் பழக்கம் உண்டாவதற்கான வாய்ப்புக்கள் பெரிதும் குறையும் ஆணையிடும் பழக்கத்திலிருந்தே கொடுங்கோன்மை புரியும் ஆசை மேலோங்குகின்றது மாவட்டங்களுக்கும் அமைப்புக்களுக்கும் சுயாதிக்கம் இருந்தால் அரசாங்கங்கள் மற்றவர்களின் விவகாரங்களைக் குறித்து முடிவுகள் எடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறையும்.''

''சுதந்திரத்தை மேம்படுத்துவதில் பெரிதும் உதவக்கூடிய இன்னோர் ஏற்பாடும் உண்டு அதாவது பிரதேச அடிப்படையில் அல்லது பொருளாதார அடிப்படையில் ஏதாவது ஒரு பொது நம்பிக்கையின் அடிப்படையில் வரையறுத்த சமய சகவாசிகளைப் போன்று வாழும் சிறுபான்மையோருக்குப் பெருமளவு சுயாட்சி அளிக்கலாம்; தற்கால அரசோ மிகவும் விசாலமானது அதன் அமைப்பினைப் பற்றிய விளக்கமோ மிகவும் குறைவு ஆதலால் ஒருவனுக்கு வாக்குரிமை இருந்தபோதிலும், நாட்டின் கொள்கையைத் தீர்மானிக்கும் ஆட்சிப் பீடத்தில் தானும் ஒரு திட்டமான பங்கு வகிப்பதாக அவன் கருதவில்லை. செல்வாக்கு மிகுந்த பிரிவினருடன் சேர்ந்துநின்று பங்குபற்றும் விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களைப் பொறுத்தவரை அவன் தன்னை அந்நியமாக ஓர் ஏவலாளியாகவே கருதுகின்றான் அவனுக்கு அரசாங்கமும் தொலைவிலுள்ள ஓர் அந்நிய அமைப்பாகவே தென்படுகின்றது காலநிலையைப்போலவே அரசாங்கத்தையும் அவன் வெறுமனே சகித்துக்கொள்ள வேண்டியுள்ளது.''

உள்ளூர் அமைப்புக்களைக் கட்டுப்படுத்தும் பணியில் பங்குபற்றுவதன் மூலம், பண்டைக் கிரேக்கத்திலும் மத்திய கால இத்தாலியிலும் வாழ்ந்த நகர-அரசுக் குடிமக்களுக்குக் கிடைத்த சுயவாய்ப்பினையும் பொறுப்பினையும் அவன் ஈட்டிக் கொள்ளலாம் அல்லவா.

''எந்தப் பிரிவினரின் இடையேயும், அதாவது எடுத்துக்காட்டாக ஓர் இனத்தவரின் அல்லது தொழிலினரின் அல்லது மதத்தவரின் இடையே வலுவான பொது உணர்வு யாதும் காணப்படுமாயின், சுதந்திரக் கோட்பாட்டின்படி அப்பிரிவினருக்குத் தமது உள் விவகாரங்கள் அனைத்தையும், அதாவது ஏனையோரைப் பொறுத்தவரை அதிக முக்கியமற்ற விவகாரங்கள் அனைத்தையும் தம்முள் தாமே முடிவு கட்ட உரிமை இருத்தல் வேண்டும் இதன் அடிப்படையிலேயே உலகம் பூராகவும் இனவிடுதலைக்கான கோரிக்கை எழுப்பப்படுகின்றது''

''ஆக்குறைந்த வன்முறையுடன் ஆக்கக்கூடிய சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு உலகம் பூராகவும் கைக்கொள்ளப்படும் நெறிமுறை இதுதான்!- அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொரு பிரிவினருக்கும் சுயாதிக்கம் அளித்தல்; ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவினர்களுக்கிடையேயான உறவுகள் சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நடுநிலை அதிகாரபீடம் ஒன்றை அமைத்தல்''

'நாங்கள் கருத்திற் கொண்ட தீமைகளுக்கும் ஆபத்துக்களுக்கும் ஒரு பரிகாரம் உண்டு. பெருமளவு சுயாதிக்கத்துக்கு வழிவகுக்கும் கூட்டாட்சி அமைப்பினை ஏற்படுத்துவதே அதற்கான பரிகாரமாகும். வேல்ஸிலும் அயர்லாந்திலும் உள்ளது போன்று இன உணர்வு மேலோங்குமாயின், அத்தகைய பகுதிகள் புறத் தலையீடு எதுவுமின்றித் தமது உள்விவகாரங்கள் அனைத்தையும் தாமே முடிவு செய்வதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்''

பிரதேசப் பிரச்னை

'நூல்:மெய் விடயமும் புனைகதையும்'

''ஒரு பிரதேசத்தில் வாழும் சிறுபான்மையோருக்குச் சுதந்திரம் வழங்குவதில் பெருந் தொல்லைகள் உள்ளன. அவர்கள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் குடிகொண்டிருந்தால், ஒரு கூட்டாட்சி அதிகார பீடத்தின் கீழ் அவர்களுக்குச் சுயாட்சி அளிப்பதன் மூலம் அந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம்.''

''அத்தகைய விடயத்தில் ஒரு திட்டவட்டமான நெறிமுறையை வகுப்பது சிரமம். முதலில் சுயாட்சிப் பிரதேசத்தின் பருப்பத்தை வரையறுக்க வேண்டும் அவ்வாறு வரையறுத்த பருப்பத்தை விடக் குறைந்த பருப்பத்தைக் கொண்ட பிரதேசத்தில் வாழும் பிரிவினருக்குச் சுயாட்சி வழங்க முடியாது ஆனால் இந்தப் பருப்பத்தைக் கொள்கையளவில் தீர்க்க முடியாது எனினும் பொதுப் படையாக ஒரு விடயத்தைக் கூறிவைக்க முடியும் அதாவது ஓர் அரசில் வாழும் பெரும் பான்மையோர் ஏனைய குடி மக்களின் உணர்வுகளுக்கு விட்டுக்கொடுக்கும் மனப் பான்மை அற்றவராக இருப்பின், ஜனநாயகத்தைச் சுமுகமான முறையில் செயற்படுத்த முடியாத நிலை ஏற்படலாம் அங்கே ஜனநாயகத்தை வலிந்து செயற் படுத்த நேரலாம் ஆனால் வன்முறையானது சிறுபான்மையோரிடையே பெரும் அதிருப்தியையே ஏற்படுத்தும் அதனால் பெரும் பான்மையோர் இன்னும் கடுமையான போக்கினையே கடைப் பிடிப்பர்.''

''பெரும் பான்மையோருடன் ஒத்துப் போகும் மனப்பான்மை வரப் பெறாத சிறுபான்மையோர் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற் குடிகொண்டிருந்தால், அந்தப் பிரதேசத்துக்குச் சுயாட்சி அளிப்பதன் மூலம் பிரச்னையைத் தீர்க்கலாம். ஆனால் சிறுபான்மையோர் ஏனைய குடிமக்களுடன் கலந்து வாழ்ந்தால், அதில் பெருத்த சங்கடம் உண்டு. யூதர்களுக்கு விரோதமான உணர்வு தலைதூக்கியுள்ள ஒரு நாட்டில் வாழும் யூதர்களின் நிலவரம் இத்தகையதே இந்தியாவில் வாழும் சோனகரின் நிலவரமும், பாகிஸ்தானில் வாழும் இந்துக்களின் நிலவரமும், அமெரிக்காவில் வாழும் நீக்கிரோவரின் நிலவரமும் இத்தகையதே. இத்தகைய நிலவரங்கள் அனைத்தையும் பொறுத்தவரை பிரதேச அடிப்படையில் சுயாட்சி வழங்குவதின் மூலம் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. இத்தகைய நிலவரங்கள் காணப்படும் பிரதேசங்களில் சகிப்புத் தன்மை பரவியிருந்தால் தான் ஜனநாயகம் வெற்றி பெற முடியும்.''

ஆண்டவன் ஒருவனுக்கே தெரியும்

''நோயாளியின் தலை எழுத்து பலமுடையதானால் வைத்தியரின் கையெழுத்து என்செயும்' என்றொரு நாடோடி வாசகம்.

டாக்டர்கள் எழுதும் மருந்து தவறானாலும், விதிபலமாயிருந்தால் நோயாளி தப்புவதோடு வைத்தியருக்குமே பேர் கிடைக்கிற தென்றொரு நம்பிக்கை.

இன்று கிளம்பியிருக்கும் 'கலவரம்' திடீர் மரண விசாரணை அதிகாரிகள் படும் தொல்லைகளாலேயே! மரணத்தின் காரணம் குறிப்பிடும்போது டாக்டர்களின் எழுத்து தெளிவாயில்லையென்றும் அவர்களை நேரில் கூப்பிடவேண்டிய நிர்ப்பந்தம் உண்டென்றும் கூறப்படுகிறது.

இதில் உண்மை உண்டென்றாலும் மருந்து எழுதும் போதும் இந்தப் பிரச்னை எழுகின்றது வெளியிலே விலைக்கு வாங்கும் மருந்தாயிருந்தால் விற்பனையாளர் அதனைப்புரியமுடியும்.

சிலவேளைகளில் அதுவும் சாத்தியமில்லாதுபோகிறது. நோயாளிஏமாந்துதிரும்பி அதே டாக்டரிடம்வரும்போது எப்போதும்நிலைமை திருந்துவதில்லை. டாக்டருக்கே தமது எழுத்துப்புரிவதில்லை.

''நான் மருந்தை எழுதும்போது தெய்வத்துக்கும் எனக்குமே இதனைத்தெரியும்'' ''இப்போது தெய்வத்துக்கு மட்டுமே தெரியு''மென்று மனம் விட்டும்பேசினார் ஒரு வைத்திய நிபுணர்.

திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் தொல்லை சற்றே வேறுபட்டது.

நோய் எதுவென்று குறிப்பிடமுடியாத கட்டத்தில் டாக்டர்தெளிவாக எழுதவேண்டுமெனவா? கடந்த காலத்தில் அவ்விதநோய் ஜீ ஓ. கே. என்ற சுருக்குறியாற் குறிப்பிடப்பட்டது G, O K; என்றால் God only knows 'ஆண்டவன் ஒருவனுக்கே அது என்னவென்று தெரியும்' என்று சொல்லப்பட்டது.

பகவானின் கருணை

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஆன்மீக அறிவுரைகளைக் கேட்க, பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வருவது வழக்கம் அதிலும் ஞாயிற்றுக்கிழமை என்றால் ஆண்கள், பெண்கள், பண்டிதர், பாமரர், சமுதாயத்தில் வெகு உன்னத நிலையில் இருப்பவர்கள் பெரும் பணக்காரர்கள், ஏழைகள் அனைவரும் அவர் திருமுன் அமர்ந்து அவரது அமுத மொழிகளைச் சுவைப்பார்கள்

ஒருவர் யாராக இருந்தாலும், அவர்களின் புறத்தோற்றத்தைப் பொருட்படுத்தாமல் அவர்கள் மனமறிந்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருள்புரிந்து வந்தார்

வழக்கம் போல் கூட்டம் மிகுந்த ஞாயிற்றுக்கிழமை. ஏழைப் பெண் ஒருத்தி ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் காணும் ஆவலால். பெருமுயற்சியோடு நாலு ரசகுல்லாக்களை வாங்கி வந்திருந்தாள். அங்கிருந்த கூட்டத்தைக் கண்டதும் அவள் திகைத்துவிட்டாள். இந்தப் பெரிய மனிதர்களெல்லாம் அமர்ந்திருக்கும் கூட்டத்தில் தனது ரசகுல்லாக்களின் மதிப்பை உணர்ந்து அவள் விதியை நொந்தபடியே வெளியேறினள் அங்கிருந்த வராந்தாவில் அமைதியாக அமர்ந்து. ரசகுல்லாக்களை மறைத்துக் கொண்டு, தனக்குள் அரற்ற ஆரம்பித்தாள்

அப்போது ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவளுக்கு அருளத் திருவுளம் கொண்டாராய், திடீரென்று வெளியே வந்து எதையோ தேடுபவர் போல கண்களைச் சுழற்றினர். தற்செயலாகப் பார்ப்பது போல் அந்தப் பெண்ணை நெருங்கி, ''அம்மா! எனக்குப்பசிக்கிறது சாப்பிட ஏதாவது வைத்திருக்கிறாயா?'' என்று கனிவாகக் கேட்டார்

வெலவெலத்து விட்டாள் அந்தப் பெண்! இப்படியும் ஒரு

(10-ம் பக்கம் பார்க்க)

மண்ணில் மனிதன்

விண்ணைக் குடைந்தவன் 'ரொக்கற்' செலுத்தினன்
விண்ணில் வீம்பு நடையு மிட்டனன்
விண்ணைக் கடந்திட விமானம் கண்டனன்
மந்திரம் போல்பல நாடு கடந்தனன்

சந்திரன் சென்றனன் செவ்வாயும் கண்டனன்
சந்திரன் தன்னில் செருக்காய் நின்றனன்
எந்திரம் கொண்டவன் கடலில் புகுந்தனன்
ஏழு கடலிலும் மிடுக்காய் திரிந்தனன்.

மண்ணைக் குடைந்தனன் சுரங்க மிட்டனன்
அங்கேயும் வீரப் பெருநடை இட்டனன்
மண்ணில் மட்டும் சரியாய் நடந்திட
மனிதனுக் கேனோ தெரிந்திடவில்லை

— வடகோவை வரதராஜன் —

★ அக். 2 காந்தி நினைவு தினம்

வள்ளுவர் நெறியும் மகாத்மா வழியும்

த. செல்வத்துரை
(சட்டத்தரணி)

சில நாட்களுக்கு முன்பு இயற்கையின் சீற்றம் மெக்சிக்கோ நகருக்குப் பிரமாண்டமான அழிவை ஏற்படுத்தியது. இப்படியான அழிவுகளைத் தடுக்க முடியாது. ஆனால் பொறாமை, துவேஷம், ஆணவம், பதவிமோகம், சந்தர்ப்பவாதம், அதிகாரமோகம் ஆகிய மனிதவர்க்கத்தைப் பிடித்திருக்கும் கொடியகுணங்களால் உண்டாகக்கூடிய அழிவுகளைத் தவிர்க்கமுடியும். தனக்குத் தெரியாமலே ஒரு மனிதனுக்குள் இக்கொடிய குணங்கள் உட்புகுந்து விடுகின்றன. ஒருமனிதன் தன்னைத்தான் அறியவேண்டுமென்பதன் கருத்து தனக்குத்தெரியாமல் தன்னிடத்தே புகுந்திருக்கும் கொடிய குணங்களை அறிந்து, உணர்ந்து, நீக்குவதாகும். இத்தகைய அறிவைத்தான் ஞானஒளி பெறுவதற்கு முதற்படிஎன்று ஞானிகள் சொல்லுவார்கள். "தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்" என்பது பழமொழி. தெய்வப்புலவா திருவள்ளுவரும் ஒருவன் தன் நெஞ்சிலிருந்து பொறாமையை நீக்கிவிடுவானானால் அதுவே சிறந்த ஒழுக்கசீலம்என்று கூறியுள்ளார்.

'ஒழுக்காறுக் கொள்க ஒருவன் தன் நெஞ்சத்து
அழுக்காறில்லாத இயல்பு'

மகாத்மா காந்தியின் மகத்தான தொண்டுகளில் ஒன்று மனிதனிடத்தில் காணப்படும் கொடியகுணங்களை நீக்கித் தெய்வத்தன்மையை வளர்க்க அல்லும்பகலும் முயற்சிசெய்ததேயாகும். அவர் ஒரு பேரொளி. உலகத் தலைவர். அவர் மரணத்திற்கு அஞ்சியதில்லை. நல்லவனாயினும் சரி, கொடியவனாயினும்சரி மரணத்தின் பிடியிலிருந்து தப்பமுடியாது ஆனால் அறவழியில் நின்று வாழ்பவன் எந்நேரமும் நிம்மதியுடனும் மனத்தைரியத்துடனும் எதையும் ஏற்கத்தயாராக இருப்பான். ஆத்ம சக்தியால் ஏற்படும் வீரம் ஈடு இணையற்றது.

காந்தி மகானின் இன்னுமொரு மகத்தான தொண்டு அரசியலை அறவழிக்குத் திருப்பியதாகும். அரசியலையும் சமயத்தையும் ஒன்றிணைத்த பெருமை அவரையே சாரும். மகாகவி பாரதி 'வாழ்க நீ எம்மான்' என்று தொடங்கும் மகாத்மாவைப் பற்றிய பாடலிலே பின்வரும் பகுதியில் அவர் சமயத்திற்கூடாக எவ்விதம் அரசியற்தொண்டு செய்தார் என்பதை மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார்.

'தன்னுயிர் போலே தனக்கழிவெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்
மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்கள் என்றுணர்தல்
இன்னமெய் ஞானத் துணிவினை மற்றுங்கு
இழிபடு போர் கொலை தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியல் அதனில்
பிணைந்திடத் துணிந்தனை பெருமான்'

சுருங்கக் கூறின் அரசியலைத் தூய்மைப்படுத்துவதற்கு மகாத்மா சமயத்தைப் பயன்படுத்தியுள்ளார் எனலாம்.

பகவத்கீதை என்ற நூல்தான் மகாத்மாவின் முக்கிய வழிகாட்டி.

மகாத்மா வாலிபப்பருவத்தில் 'பரிஸ்டர்' பட்டத்திற்காக இங்கிலாந்தில் படித்துக்கொண்டிருக்கும்போதுதான் பகவத்கீதை ஆங்கிலமொழிபெயர்ப்பை முதல்முதலாகப் படித்தார். ஆத்மசக்தியின் முக்கியத்துவத்தையும், எல்லா உயிர்களிடத்தும் இறைவன் இருக்கின்றார் என்பதையும் ஒவ்வொரு முகத்திலும் கடவுளைக் காணவேண்டும் என்ற பேருண்மையையும் உணர்ந்தார். எந்த உயிரையும் அழிக்க மனிதனுக்கு உரிமை இல்லை என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாக வைத்துத்தான் காந்தியின் அகிம்சா தர்மம் உருவானது. 'தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது இன்னுயிர் நீக்கும் வினை' என்ற குறள் இவ்விடத்துச் சிந்திக்கற்பாலது.

கீதைஹிம்சை வழியை ஆதரிக்கும் நூல்என்று சிலர் கருதுகின்றனர். கீதையின் முக்கிய போதனையையும் சரவூலக் கோட்பாட்டையும் முழுமையாக உணராமலே அப்படிக் கருதுகின்றனர். ஒரு மனிதனுக்குள் இருக்கும் தீயசக்திகள் தான் துரியோதனன் முதலியோர் என்றும் நல்ல சக்திகள்தான் பஞ்சபாண்டவர்கள் என்றும் மகாத்மா விளக்கியிருக்கின்றார். கீதையின் இடம்பெறும் போர் ஒரு மனிதனின் உள்ளத்திலே தீய சக்திகளுக்கும் நல்ல சக்திகளுக்குமிடையிலே நடக்கும்போர் என்றுதான் வியாக்கியானம் கொடுத்திருக்கின்றார். கடவுளை ஒவ்வொரு முகத்திலும் கண்டபடியாற்றான் மகாத்மா மனிதரையும் மற்றைய உயிர்களையும் ஒரேமாதிரி நேசித்தார். இந்தத் தெய்வீகத்தன்மையினாற்றான் இவர் மகாத்மா வென்று அழைக்கப்பட்டார். மகாகவி பாரதியும் "உயிர்கள் எல்லாம் தெய்வம் அன்றிப் பிறிதொன்றில்லை, ஊர்வனவும், பறப்பனவும் நேரே தெய்வம்' என்று பாடியுள்ளார்.

எவ்வித சர்வாதிகாரத்தையும் மகாத்மா முற்றாக வெறுத்தார். எந்த விடயத்தையும் நன்கு கலந்துரையாடித் தர்க்கித்து ஆராய்ந்தாற்றான் உண்மையை அறியமுடியும் என்பது மகாத்மாவின் கொள்கை. எவ்விதமான கேள்வியை யார் கேட்டாலும் தனது பத்திரிகைகளாகிய 'நவஜீவன்' 'யௌவன இந்தியா' 'ஹரிஜன்' மூலம் தெளிவாகக் கேள்விகளை ஆராய்ந்து பதில்கொடுத்தார். "நான் சொல்வதுதான் சரி. எல்லோரும் அதை ஏற்கவேண்டும்" என்று சர்வாதிகாரமுறையில் அவர் ஒருபோதும் சொன்னது கிடையாது

இக்கருத்தையே வள்ளுவரும்,

„எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்றகுறளில் வலியுறுத்தியுள்ளார்

ஒருமுறை சர்வாதிகாரி முசோலினியைச் சந்தித்த காந்தி தனக்கும் முசோலினிக்குமிடையில ஒருவரையொருவர் புரிந்து கொள்ளக்கூடிய ஒத்தமன நிலையை ஏற்படுத்தமுடியவில்லை என்று கூறியுள்ளார். இரண்டாவது உலகயுத்தம் தொடங்குவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு சர்வாதிகாரி ஹிட்லருக்கு யுத்தத்தால் வரக்கூடிய அழிவுகளை எடுத்துக் கூறிக் கடிதமொன்று எழுதினர். ஹிட்லர் பதிலே போடவில்லை. (இரு சர்வாதிகாரிகளும் தங்களை வந்து பார்க்கும்படி ஜவஹர்லால் நேருவை எவ்வளவோ வேண்டியும் நேரு அதற்கு மறுத்துவிட்டார்.)

மகாத்மா மரணமடைந்த பொழுது அவரின் உடைமைகளின் பெறுமதி ஐம்பது ரூபா அளவிற்றான் இருந்தது. உடுப்பதற்கு உபயோகித்த கதர்த்துணிகளும், சாப்பிடுவதற்கு உபயோகித்த பாத்திரங்களும் யாரோ உபகாரமாகக் கொடுத்த பொக்கற் கடிகாரமும். பகவத்கீதைப் புத்தகம் ஒன்றும் வேறு இரண்டு சிறிய பொருள்களும் தான் அவரின் உடமைகள். வறிய மக்கள் மத்தியிலும் தாழ்த்தப்பட்ட ஜாதி மக்கள் மத்தியிலும் தானும் அவர்களில் ஒருவனாகவே வாழ்ந்தார். மனிதர்களுக்கிடையில் அவர் எந்த விதமான பாகுபாட்டையும் காணவில்லை. அவருக்கு யாபேரும் நடமாடும் தெய்வங்கள் தான். பண்டிதரும் சரி, பாமரரும் சரி, அழகானவரும் சரி, அவலட்சணமானவரும் சரி உயர்ந்தோரும் சரி, தாழ்ந்தோரும் சரி யாவரும் கடவுளின் குழந்தைகளே அவர்களுக்கு மனம், வாக்கு, காயத்துடன் சிந்தனையால், சொல்லால் செயலால் தொண்டு செய்வதே தனது இலட்சியமாகக் கொண்டார். "மக்களின் தலைவர்கள் தங்களைக்காலின் கீழ் மிதிபடும் தூசியிலும் கீழாகக்கருதவேண்டும்" என்று மகாத்மா அறிவுரை வழங்கியுள்ளார். இதையே குறளும் பின்வருமாறு கூறுகிறது

"பணிவுடையன் இன்சொலனாதல் ஒருவற்கு
அணி அல்ல மற்றுப்பிற"

மேலும் தனது நாணயத்திற்கு ஒருபக்கம் அகிம்சை மறுபக்கம் சத்தியம் என்ற முத்திரைகள் பதிக்கப்பட்டுள்ளதாக மகாத்மா கூறியிருக்கிறார். இதே கருத்தையே வள்ளுவரும்

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்று கூறியுள்ளார்.

மகாத்மா தன்னை அகிம்சை வழியில் நிற்கும் ஒரு சமதர்மவாதி என்றார். பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றலையும் வித்தையையும் உடையவனை மற்றையோர் அநியாயமாகக் குட்டிச்சுவராக்கக்கூடாது என்றும்சொன்னார். ஆனால் உற்பத்தியைப் பெருக்கும் ஆற்றல் நிறைந்தவன் தனது சமூகத்தின் தகுந்த தேவைகளையெல்லாம் மனமுவந்து பூர்த்தி செய்து அதேவேளையில் தான் ஒரு சாதாரண குடியானவனைப் போன்று வாழ்க்கை நடத்த வேண்டும் என்றும் கருதினார். ஒருவன் தனது ஆற்றலுக்கேற்ற சேவையைத் தன் சமூகத்திற்குத் தாராளமாகச் செய்தல் வேண்டும். சமூகமும் அவனுக்குத் தேவையானவற்றை அளித்தல் வேண்டும். இவையே பின்வரும் குறளும் வலியுறுத்துகின்றது.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

அஹிம்சை நெறிமூலம் எப்படிப்பட்ட கெட்டவனையும் மாற்றலாம் என்பதை மகாத்மா தர்க்க ரீதியாகக் காட்டியிருக்கிறார். ஒருவன் கடவுளை நம்பாமல் இருந்தாலும் அன்புக்கும் உண்மைக்கும் மதிப்புக் கொடுக்காப்பானாயின் அவன் உயர்ந்தவனே. அன்பு, உண்மை ஆகியன இறைவனின் மறு நாமங்களாகும்.

"அன்புண்மையாக அமர்ந்த கடவுட்குள்
அன்புண்மையால் வழிபாடாற்று"

என்று சுத்தானந்த பாரதியின் யோகசித்தி கூறுகின்றது. ஆகவே கடவுளை நம்பாதவர் அஹிம்சைக்கு நெகிழ மாட்டார்என்பதுதவறு அஹிம்சைவாதி தன்னைத்தான் வருத்தித் தன் உயிரையும் தியாகம் செய்யக்கூடிய ஆத்மீக சக்தியுடையவனாக இருத்தல் வேண்டுமென்பது மகாத்மாவின் கருத்து. அகிம்சை வழி தவிர்ந்த எந்த வழியும் மனிதனிடத்துள்ள கொடிய தன்மைகளை வெளிப்படுத்த வழிவகுக்கும்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்பது வள்ளுவர் கருத்தாகும்.

சிறந்த இலட்சியங்களை நாம் அடைவதற்கு உபயோகிக்கும் வழிகளும் சிறந்தனவாயும் தூய்மையுடையனவாயும் இருத்தல் அவசியம் என்பது உலகிற்கு மகாத்மா அளித்த இன்னுமொரு தத்துவமாகும். தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட தூயவழியால் வராத எதுவும் நிரந்தரமான நற்பயனைத் தராது என்பது அவரின் கோட்பாடு

நல்லோர் விலக்கிய வழிகளையும் நெறிகளையும் எக்காரணம் கொண்டும் கடைப்பிடித்தால் அச்செயல்கள் நிரந்தரமான நல்ல பயன்களை தரமாட்டா என்பதை வள்ளுவரின் கருத்துமாகும்.

"கடிந்த கடிந்தொரார்
செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும்பீழை தரும்,"

ஆசிரியர் திலகம்

கே. செல்லத்துரை

நல்லாசிரியரும் அறிஞருமான யாழ். இந்துவின் முன்னாள் ஆசிரியர் பண்டிதர் கே. செல்லத்துரை அவர்கள் தமது இருபத்தேழு ஆண்டுகால சேவையிலிருந்து இளைப்பாறிய காலை வெளியிடப்பெற்ற பிரியாவிடை மலரில் இடம்பெற்ற கட்டுரை. இக்கட்டுரை மூலம் மறைந்த பேராசிரியர் தனஞ்சயராசசிங்கம் அவர்களையும் நினைவு கூர்வோம்.

இற்றைக்கு இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன் பண்டிதர் கே. செல்லத்துரை பி. ஏ. அவர்கள் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் எனக்கு ஐரோப்பிய வரலாற்றினை ஆங்கிலத்திற் படிப்பித்தார். 1949 ஆம் ஆண்டு அவரிடம் தமிழைக் கற்கும் வாய்ப்பினைப் பெற்றேன்.

பேராசிரியர் கலாநிதி
ச. தனஞ்சயராசசிங்கம்

ஆசிரிய திலகமாகிய செல்லத்துரை அவர்கள் ஆங்கிலம், தமிழ், இலத்தின் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த புலமையுடையவர். இலங்கைப் பல்கலைக்கல்லூரியிற் பயின்று இலண்டன் பல்கலைக்கழகக் கலைமாணிப்பட்டத்தினை 1941 ஆம் ஆண்டிற் பெற்றார். யாழ்ப்பாணஇந்துக் கல்லூரியில் இருபத்தாறு ஆண்டுகள் ஆசிரியராய்க் கடமையாற்றி எம்போன்ற தமிழ் மாணக்கர் பலரைத் தோற்றுவித்த பெருமை அவருக்கு உண்டு.

பண்டிதர் அவர்கள் பாடங்களைக் கற்பிற்கும் முறை தனித்தன்மை வாய்ந்தது. தொல்லாணை நல்லாசிரியர் இலக்கணங்கள் அத்தனையும் சிறப்புற இவரிடம்விளங்குகின்றன. பாரதத்தில் கன்னன் - குந்தி சந்திப்பினையோ கன்னனின் இறப்பினையோ இவர் படிப்பிக்கும் முறை கேட்போரைப் பிணிக்கும் தன்மையதாய் விளங்கும். உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பாத்திரங்களின் இயல்புகளுக்கு ஏற்ப குரலின் ஏற்றமும் தாழ்த்தியும் கூற்றுக்களை விரித்தும் வெவ்வேறு ரசபாவங்களைத் தனித்தனியே நாம் சுவைக்குமாறு கற்பிக்கும் வல்லமை படைத்தவர். நாலடியார் பாடங்களைக் கற்பிக்கும் பொழுது அவற்றினை வேற்றிலக்கியங்களுடன் ஒப்பிட்டுக் கவிச்சிறப்பினை ஆராய்வார் எல்லாவற்றிற்கும் மேலாகப் பரீட்சைத் தேவை

(10-ம் பக்கம் பார்க்க)

ஆற்றுமா?
ஆற்றுதா?

(1)

கப்பல் போகுது போகுது
கடல் இல்லாமல் போகுது!
அழகாய் ஓடிப் போகுது
ஆள் இல்லாமல் போகுது!
பப்பி வாலை ஆட்டவும்
பாப்பா கையைக் காட்டவும்
கப்பல் போகுது போகுது
காற்றில்லாமல் போகுது!

[?]

ஆற்றுமா ஆற்றுதா?
அடுத்த பக்கம் பாருங்கள்

(2)

தானே நடவான் ஒருதம்பி
தனியே நடவான் ஒருதம்பி
ஆனால் இருவரும் சேர்ந்துவிட்டால்
ஐந்து காலில் நடப்பாராம்!
கட்டைத் தம்பியைப் பிடித்துக் கொண்டு
குட்டித் தம்பி நடக்கின்றான்!
குட்டித் தம்பியை நடத்திக் கொண்டு
கட்டைத் தம்பியும் நடக்கின்றான்!

[?]

ஆற்றுமா ஆற்றுதா?
அடுத்த பக்கம் பாருங்கள்

(10-ம் பக்கம் பார்க்க)

கந்தவேள் கோட்டம்



'செங்கை ஆழியான்'

பகுதி ஒன்று: ஆக்கல்

அத்தியாயம் - 3

மாதோட்ட நன்நகர்

'வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரின்' புகழ் மிக்க மாந்தைத் துறைமுகத்தில் தரித்து நின்ற மரக்கலம் ஒன்றிலிருந்து கம்பீரமான இளைஞன் ஒருவன் தளத்தில் குதித்தான். அவன் வந்த மரக்கலம் சேரநாட்டுக்குரியதென்பது, அம்மரக்கலத்தின் உச்சியில் பறந்து கொண்டிருந்த விற்கொடியிலிருந்து புலனாகியது.

மேற்கே அலையெறிந்து ஆரவாரித்துக்கொண்டிருந்த சமுத்திரத்தின் மடியில் சாய்வதற்காகச் சூரியன் சரிந்துகொண்டிருந்த இனிய மாலைப்பொழுதில் மாந்தைத்துறையின் கரையில் நிற்பது இனிய அனுபவமாக இருந்தது. அவன் மரக்கலத்தில் ஏறுவதற்கு முன்னரே மாந்தைத்துறைமுகத்தின் அழகையும் கம்பீரத்தையும் பெருமையையும் கேள்விப்பட்டிருந்தான் நேரில் பார்க்கும்போது அவன் கேள்விப்பட்டவை உண்மையில் மிகச் சொற்பம் எனப்புலப்பட்டது,

இன்று மல்வத்து ஓயா என்றும் அருவியாறுஎன்றும் குறிக்கப்படுகிற நதி பண்டை நாளில் கதம்பநதி எனப்பட்டது. மாத்தளை மலைகளின் மேற்குச் சாய்வுகளில் தோற்றம்பெற்று நிறை நீருடன் வடமேற்கு நோக்கிப்பாயும் கதம்பநதி, ராஜராஜபுரத்தை (மன்னார்) அடைவதற்கு இருபது கல்தொலைவில் இரண்டு கிளைகளாகப்பிரிகின்றது. அவ்வாறு பிரிந்த நதியின் ஒருகிளை அருவியாறு என்ற பெயருடன் மன்னார்த் தீவுக்குத்தெற்கே பலகல் தொலைவில் கடலில் கலக்கின்றது. மற்றைய கிளை பாலாவி என்ற பெயருடன் திருக்கேதீஸ்வரத்துக் கருகில் கடலுடன் சேர்கின்றது நமது கதை நிகழ்கின்ற காலத்தில பாலாவி நதியின் குறுக்கே கட்டுக்கரைக்குளம் அமைக்கப்படவில்லை அதனால் பாலாவியில்எப்போதும்தங்கு தடையின்றிநீர் பாய்ந்து கொண்டிருந்தது

பாலாவியின் வடகரையில் 'பாவம் வினையறுக்கும் திருக்கேதீஸ்வர ஆலயம் அமைந்திருக்கின்றது பாலாவியின் தென்கரையில் ஈழமண்டலத்தின் பிரதான துறையாக மாந்தை விளங்கிவந்தது பண்டைக்காலத்தில் அராபிக் கடலூடாகநடைபெற்ற கப்பற்போக்குவரத்தில் மாந்தைத் துறைமுகம் மிக்க வளம் பெற்றிருந்தது. தென்மேல் பருவக்காற்றின் தாக்கத்திலிருந்து மாந்தைத்துறை பாதுகாப்பளித்தது. அராபிய, உரோம, கிரேக்க, இந்தியக் கப்பல்கள் பலவும் மாந்தையில் வந்து தங்கிச்சென்றன. அலைபுரண்டு ஓடி வேகமாகக் கடலைச் சேர்ந்த பாலாவி நீரினாலும், கடல் நீரோட்டங்களினாலும் கரி சேராத ஆழமான துறையாக அன்று மாந்தை விளங்கியது. இன்று பாலாவியின் முகத்துவாரம் முற்றாக மறைந்துவிட்டது. சேறும் சுரியும் மண்டி முன்னைய வனப்பினை அது இழந்துவிட்டது.

ஈழத்திற்கும் தென்னிந்தியாவிற்குமிடையிலான இணைப்பினை மாந்தைத்துறையே ஏற்படுத்தியது சோழமன்னர்கள் இலங்கையைப் பொலநறுவையிலிருந்து ஆட்சிசெய்த காலத்தில், மாதோட்டத்தினதும் திருக்கேதீஸ்வரத்தினதும் புகழ் பாரதமெங்கும் பரவியிருந்தது

அத்தகைய மாந்தையின் துறையில் நமது சேரநாட்டுப் பிரயாணி, வியப்புடன் இறங்கி நின்றான். களஞ்சியக்கட்டிடங்களும் சுங்கக்கட்டிடங்களும் நிறைந்த இத்துறையில் மரக்கலங்களில் பொருள்களை ஏற்றுவதிலும் இறக்குவதிலும் பலர் ஈடுபட்டிருந்தனர் இறங்குதுறையின் மத்தியில் நிறுத்தப்பட்டிருந்த கொடிஸ்தம்பத்தில் பறந்து கொண்டிருந்த இடபக்கொடி. யாழ்ப்பாணத்துச் சிங்கைஆரியமன்னனின் ஆதிக்கத்தின் கீழ் இப்பிரதேசம் இருக்கின்றது என்பதைப் பறைசாற்றியது.

சுங்கக்கட்டிட வாசலில் அவன் தடுத்து நிறுத்தப்பட்டான். பட்டோலை ஒன்றுடன் வாசலில் நின்றிருந்த அதிகாரி ஒருவன் அவன் பற்றிய விபரங்களை ஓலையில் குறித்துக்கொண்டான்.

''உமது பெயர்?''

''சதாசிவப்பெருமான்''

''எங்கிருந்து வருகிறீர்?''

''மலையாளதேசத்திலிருந்து''

''இப்போது எங்கு செல்கிறீர்?''

''அனுராதபுரத்திற்குச் சென்று அங்கிருந்து ஐயவர்த்தனபுரத்திற்குச் செல்லப் போகிறேன்'' என்றான் சதாசிவப்பெருமான். அதிகாரி அவனை ஏறிட்டுப் பார்த்தான். ஆஜானுபாகுவான சதாசிவப்பெருமாளின் கம்பீரமான சரீர தோற்றமும் கன்னக்குடுமியும் இப்போதுதான் அவன் கண்களிற்பட்டதுமாதிரிஏறிட்டுப்பார்த்தான்.

'காரணம்... தலயாத்திரையா?''

''இல்லை தென்னிலங்கை மன்னவனின் படையில் சேர்ந்து பணிபுரிய,''

''பணிபுரிவதாயின் யாழ்ப்பாண இராச்சியத்திற்குச்செல்லலாமே...''

''எனக்கு உகந்த தொழில் அங்கில்லை'' என்றான் சதாசிவப்பெருமாள்

சுங்க அதிகாரியின் விழிகளில் மீண்டும் வியப்பு அதனைக் காட்டிக் கொள்ளாமல் கேட்டான்:

''கையிலுள்ள பொதியில் இருப்பவை என்ன?''

சதாசிவப்பெருமான் கரத்தில் இருந்த பொதியை அவிழ்த்துக் காட்டினான். உடுபுடவைகளும் அவற்றிடையே அங்குசம் ஒன்றும், கட்டுச்சாதமும் அவற்றில் இருந்தன அதிகாரி அந்த அங்குசத்தைக் கரத்தில் எடுத்துப் பார்த்தான். அதன் நுனிக் கூர்மையைப் பரிசோதித்துப் பார்த்தான்.

''நீர் பணிக்கரோ?...''

'ஆம்'' என்றான் சதாசிவப்பெருமாள். ஈழத்தில் யானைகளைப் பிடித்துப் பழக்குபவர்களாகப் பணிக்கர்கள் இருந்தார்கள். யானைப்படையில் இவர்கள் முதன்மையான பாகர்களாக இருந்தனர்

அதிகாரியின் முன் நின்றிருந்த சதாசிவப்பெருமாளின் தோற்றம் அவன் யானைகளை அடக்கிப் பழக்கக்கூடியவன் என்பதைநிரூபிக்குமாறு இருந்தது.

'உமக்கு ஏற்ற தொழில் யாழ்ப்பாண அரசில் இல்லை என்று சொல்லமுடியாது நீர் பனங்காமத்து வன்னியரிடம் பணிக்கராகச் சேரலாமே?...''

''எனக்கு அதில் விருப்பம் தான்.. என்றாலும் இப்போது ஐயவர்த்தனபுர மன்னன் பராக்கிரமபாகுவின் பணிக்கராக எனது மாமன் இருக்கிறார். அவருக்கு வயதாகிவிட்டது. அவர் ஊர் திரும்ப இருக்கிறார். அந்தவிடத்தில் என்னை அமர்த்துவதற்காக என்னை அழைத்துள்ளார். தட்டமுடியாத கட்டளை'' என்று சதாசிவப்பெருமான் சிரித்தான்.

அவன் சுங்கக் கட்டிடத்தை விட்டு வெளியேறும்போது அந்த அதிகாரி ''கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு ஈழத்திற்கு வரத்தேவையில்லை, பணிக்கரே எங்கள் நாட்டிற்கு வந்த ஒரு விருந்தாளியை நாம் ஒருபோதும் பட்டினிபோடமாட்டோம், வழியில் கிராமங்கள் தோறும் விருந்தினர் மடங்கள் இருக்கின்றன இன்றிரவு கூட நீர் திருக்கேதீஸ்வரம் சென்று தங்கலாம்'' என்றான்.

சதாசிவப்பெருமாள் திரும்பிப் பார்த்து நட்புடன் சிரித்து விட்டு, பாலாவி ஆற்றினை நோக்கி நடந்தான்.

தூரத்தில் பாலாவியின் கரைமேல் செய்யசடைமுடியான்' திருக்கேதீச்சரத்தான் திருக்கோயில் கோபுரம் உயர்ந்து விளங்கியது. 'பரம்பரன் உருவாய் உற்ற பாலாவி'யில், 'பலவினை மாதோட்ட நன்னகர் குறும்பு போக்க' இறங்கித் தீர்த்தமாடிக்கொண்டான் சதாசிவப்பெருமாள் அவன் களைப்பு பாலாவியின் தெளிந்தநீரில் கரைந்து சென்றது. மாதோட்ட நன்னகரின் பாவவினை அறுபர பயில் பாலாவியின் கரைமேல்' ஏறிநின்றபோது, அவன் மயில் ஒன்றின் அகவலைக்கேட்டான்.

நிமிர்ந்து பார்த்தபோது இராசகோபுரத்தின் கலசத்தில் மூன்றுமயில்கள் தோகைஒளிர அமர்ந்திருந்தன.

கோயில் அமைந்திருந்த நகரம் அருள்மொழித்தேவர் வளநாடு எனப்பட்டது சோழமன்னர்கள் இந்த ஆலயத்தினை நிறுவிப் பாரமரிப்பதற்குத் தேவதானங்கள் வழங்கியிருந்தார்கள் இந்தக் கோயிலைக் கட்டியவரின் பெயர். ஆலய முன்றலில் இராசகோபுர இடது அடிப்பீடத்தில் சிலாசாசனமாகப் பொறிக்கப்பட்டிருந்தது சதாசிவப் பெருமாள் அதனைப் படித்துப் பார்த்தான்; ''சோழமண்டலத்து க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு வேளார் நாட்டுச் சிறுகூற்ற நல்லூர் கிழவன் தாழிகுமரன் ஈழமான மும்முடி சோழமண்டலத்து மாதோட்டமான ராஜராஜபுரத்து எடுப்பித்த ராஜராஜ ஈஸ்வரத்து மஹாதேவர்க்கு சந்திராதித்தவல் நிற்க ராஜராஜ''

சோழமண்டலத்துச் சிறுகூற்ற நல்லூர்த்தலைவன் தாழிகுமரன் என்பவன் இச்சிவாலயத்தை எடுப்பித்தான். பின்னர் ஈழத்தின்மீது படையெடுத்து வந்த ராஜராஜன், அவனது மகன் ராஜேந்திரன் என்போர் இந்த ஆலயத்தின் பரிபாலனத்திற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

திருக்கேதீஸ்வரத்தின் மேற்குப்பக்க எல்லையாக ராஜராஜப் பெருந்தெரு அமைந்திருந்தது வடக்கு எல்லையாகக் கம்மாளச்சேரி காணப்பட்டது. தாழிக்குமரனால் அமைக்கப்பட்ட இக்கோயிலுக்குரிய கிருத்தியங்கள் குறைவின்றி நடப்பதற்காக, சோழமன்னர்கள் நிரந்தர ஒழுங்குகள் செய்திருந்தார்கள். தஞ்சாவூர்ப் பெருங்கோயிலில் கர்ப்பகிரகத்தையும் உட்பிரகார மண்டபத்தையும் சுற்றி அமைக்கப்பட்ட கருங்கற் சுவர்களில் சிலாசாசனங்கள் பதியப்பட்டிருப்பதுபோல, இங்கும் காணப்பட்டன.

''வலை பெருமிகோளால் ஐங்கோல் உட்பட வடக்கும், மேல்பாற்கெல்லை ராஜராஜப் பெருந்தெருவுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை கம்மாணச்சேரிக்குத் தெற்கும் இவ்விசைத்த பெருநான்கெல்லைக்குள் அகப்பட்ட நிலத்தில் இவ்வூர்க்குடி குறையாமல் இருந்த மாளிகையும் வீடும் தோட்டமும் நீங்கலாகவும் இன்னவட்ட இத்தனையும் இத்தேவர்க்கு இறையிலி தேவதானம் ஆக.''

சதாசிவப்பெருமாள் மகாலிங்கத்தை வணங்கிய பின் உட்பிரகாரத்தை வலம் வந்தான் கோயிலில் பக்தர்கள் நிறைந்து காணப்பட்டனர். கோயிலைவிட்டு வெளியேறி, அருள்மொழித்தேவ வளநாட்டினுள் அவன் நடக்கத் தொடங்கினான்.

வளம்மிக்க சிறியதொரு நகரமாக காணப்பட்டது. சேலை நெசவுசெய்யும் தறிகளின் சத்தம் வீதிகளில் கேட்டது. இங்கிருந்து துகில்களை வாங்குபவர்களும் விற்பவர்களும் அதற்குரிய வரிப்பணம் செலுத்த வேண்டும் அதற்காகச் சோழமன்னன் சட்டம் செய்திருந்தான்; ''இவ்வூர் நெய்யும் தறிகளால் தறியால் திங்கள் அரைக்கால் அக்கமும், இருப்பவற்றில் கொடுப்போனிடை காசில் வாயொரு வட்டமும், கொள்வானிடை ஒரு வட்டமும் கொள்வதாகவும், ஆக இப்படிக்கொண்டு பொழுது இருநாளியாக நிதம் ஆறநாழி அரசி திருவமிர்தம் அர்சிக்கும் மாணி இரண்டுக்கு நிதம் நெல்லெண்ணாழியும்'' இவ்வாறு பெறப்படுகின்ற பணத்திலிருந்து திருவமுது படைப்பதற்கான அரிசியும் இரு பிரமணர்களுக்கு எட்டுப்படி நெல்லும் வாங்குவதற்கு ஏற்பாடிருந்தது

வீதிகளின் சந்திகளில் சந்தி விளக்குகள் ஏற்றப்படுவதை சதாசிவபெருமாள் கண்டான் இந்நகரத்தில் சந்தி விளக்குகளை ஏற்றுகின்ற செலவினை வாழைக்காய் வணிகரும் வெற்றிலை வணிகரும் ஏற்றிருந்தனர்.

ராஜராஜப் பெருந்தெருவும் கம்மாளச் சேரித்தெருவும் சந்

(8-ம் பக்கம் பார்க்க)

படைவேலை எடு! தடை ஏது விடு!!

தமிழ் தந்த உனை அமிழ் தென்று நினைந்[து]
உயிர் கொண்ட இனம் முருகா
உமி என்ற நிலை எமை வந்து அடைந்[து]
இடர் கண்ட விதம் சரியா
எமை இன்று பகை சிறை கொண்டு வதை
செயக் கண்டு இனும் சிலையா
இமை என்றும் விழி இடர் காக்கும் விதி
இலையென்றால் இது முறையா
உளமெங்கும் தமிழ் உடல் வெந்தும் தமிழ்
உயிர் சென்றும் தமிழ் நினைவாய்
களம் நின்றும் தமிழ் பகைவென்றும் தமிழ்
என உள்ளும் தமிழ் இளைஞர்
உடல் எங்கும் உரம் இடர் வெல்லும் திறம்
கடல் உள்ளும் பலம் பெறவே
மடல் கொண்ட மலர் உடலெங்கும் படர்
சுடர் கந்தா வரம் தருவாய்
உணவின்றிப் பலர் உணர்வின்றிப் பலர்
உறையின்றிப் பலர் உலர்ந்து
பிணமென்று துயர் அடைகின்ற நிலை
தொடர்கின்ற விதம் எதனால்
படைவேலை எடு தடைஏதுவிடு
இடர் போக்கி அருள் குமரா
பகை வென்ற இனம் பயமின்றித்தினம்
தமிழ் மண்ணில் எழ அருள்வாய்

—கே. கே. மதிவதனன்

ஒருவர்:- ஏன் மூச்சடக்கிப் பழகுகிறீர்கள்?

மற்றவர்:- 'கிறவுட் நேரத்தில் மினிபஸ்ஸில் பயணம் செய்வதற்குத்தான்

கேசரி

இராசராசசோழப் பேரரசன் – 11

இராசராசன் அரசு

க.சி.குலரத்தினம்

உலகப் புகழ் பெற்ற பேரரசுகளில் உரோமப் பேரரசு என்பதும் ஒன்று அதனை நெப்போலியன் தவிடு பொடியாக்கியமை வரலாறு. பாரத நாட்டில் வடபால் எழுந்த மௌரிய வல்லரசின் பரப்பும் மிகப் பெரியது. அது தென்னாடு வரை பரவியிருந்தது. அதனைச் சங்ககாலப் புலவர்கள் தங்கள் பாடல்களிற் குறித்துள்ளார்கள். பிந்துசாரன் என்பானின் பேரரசில் பதினறு அரசுகள் அடங்கியிருந்தன என்பர் பிந்துசாரன் எதிரிகளை அழித்தவன் என்று கிரேக்க அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மௌரியர்களுக்குப் பின் சாதவாகனர் என்னும் குடும்பத்தார் பேரரசு கண்டவர்கள். சாதகர்ணி என்னும் பேரரசன் அசுவமேதம் இராசசூயம் ஆகிய யாகங்களைச் செய்து தன் வலிமையைக் காட்டியவன். அவனுக்குப் பின் கலிங்க நாட்டுக் காரவேலர் பேரரசு கண்டவன். பின்னர் வாகாடகர் என்பாரைச் சேர்ந்த பிரவரசேனர் என்பான் பேரரசாக மதிக்கப் பெற்றவன். அவனும் பல யாகங்கள் செய்து பெருமை பெற்றவன். அவன் வழி வந்த ஹரிசேனனும் பேரரசர் பதவியைப் பேணியவன். அவனுக்குப் பின் மேற்குப் பகுதியைச் சேர்ந்த கங்கர் குலத்தவர் தலையெடுத்து நீண்ட காலம் செல்வாக்குற்றிருந்தனர். சங்கர்களின் வலிமையை அடக்கிய பெருமை சோழருக்கே உரியது.

இராசராசன் இளவரசனாக உத்தம சோழனுக்குக் கீழிருந்து பெற்ற பரந்த அரசியல் ஞானம் அவன் பழைய பேரரசுகளின் நடை முறைகளை நன் கறிந்தமையாலும் உண்டானதாகும். கிராம ராச்சியங்களின் மீது மத்திய அரசின் மேற்பார்வை, படைத் தலைவர்கள், சேனதிபதிகளை நியமித்தல், அரசியல் அலுவலர்களிடம் அதிகாரத்தைப் பங்கீடு செய்தல், தொழிலாளர் குழுக்களை அமைத்தல், வர்த்தகக் குழுக்கள், நெசவுக் குழுக்கள், மருத்துவர் குழுக்கள், ஆதுலர் சாலை மேற்பார்வையாளர் முதலான அலுவல்களை இராசராசன் நன்கறிந்திருந்தான்.

பொதுமக்களிடையே கடின உழைப்பும் பொருட் செழிப்பும், சமயப் பற்றும் நிலவுதல் இன்றியமையாதது என்பதை இராசராசன் உறுதியாகக் கருதினன். சமய ஈடுபாட்டில் பெருமனம் படைத்திருத்தல் வேண்டும் என்னும் பரந்த மனப் பான்மையும் அவனிடம் இருந்தது. பௌத்தர், சமணர் முதலான புறச் சமயத்தவர்களும் தன் நாட்டில் மனம் புண்படாமல் சமவுரிமையோடு வாழ வேண்டும் எனக் கருதினன். சைவத்தின் தனிக்காவலன் எனப் பக்தித் திறம் பூண்ட அவன் பௌத்தக் கோயில்களுக்கும் வரையாது வழங்கினன். அது பேரரசனின் பெருந் தன்மையான சமயப் பொறை.

உண்மை, ஊக்கம், ஒப்புரவு முதலிய நல்லொழுக்க நெறியில் மக்கள் வாழ்வதற்கான வழிவகைகளைக் கோலுவதில் இராசராசன் பெரிதும் உழைத்தான். முன்னர் சாளுக்கிய மரபில் வந்த புலிகேசி பெரு வலி பெற்று அசுவமேத யாகமும் செய்து, ஹர்சர் என்னும் புகழ் பெற்ற பேரரசனையும் வென்று பெருமை பெற்றிருந்த போதிலும், பல்லவப் பேரரசரிடம் தோற்றுப் போனதையும் இராசராசன் ஆராய்ந்து அறிந்திருந்தான். புகழ் படைத்த பல்லவர்களுடன் பாண்டியர்கள் தீவிரமாகப் போர் புரிந்த போதிலும், பல்லவரை வென்ற பெருமை சோழருக்கே உரியதாயிற்று. தன் முன்னோரின் வீரத்தைப் பற்றி நன்றாக அறிந்திருந்த இராசராசன், சோழ பரம்பரையில் வந்த தனது பங்கு என்ன, அது எத்தகையது என்பதையும் திட்டமிட்டிருந்தான். செயலாற்றினன் வென்றான்.

இராசராசனின் படைகள் மனப்பூர்வமாக மகிழ்ச்சியுடனும் சுய விருப்பத்துடனும் போர்ப் பறை கேட்ட மாத்திரத்தே துள்ளி யெழுந்து தங்கள் தோள் வலி, வாள் வலி காட்டுவதற்காக நாட்டின் நலன் கருதிச் சேர்ந்த நல்லவர்கள் ஏவற் பேய்கள் கூரையைப் பிடுங்கும் தன்மை அவன் ஆட்சியில் நிலவவில்லை படைத் தலைவர்கள் கண்ணியம், கட்டுப்பாடு, நல்லொழுக்கம், நாகரிகம் முதலிய பெருந்தன்மைகளை வற்புறுத்தி வந்த உத்தம சீலர்கள் அவர்களுள் இருவர் புகழ் கல்வெட்டுக்களில் வாசனை வீசுகின்றது. மாதண்ட நாயகன் பஞ்சவன் மராயன் என்பவன் ஒருவன். மற்றவன் பரமன் மழபாடியார் என்னும் மும்முடிச் சோழன்.

இராசராசன் தனது பெரிய நாட்டைப் பல மண்டலங்களாகப் பிரித்திருந்தான். மண்டலங்கள் தோறும் தலைவர்கள் படையுதவி சூழ உதவியாயிருந்தனர். எல்லைப்புறமெங்கும் நிரந்தரமான காவற்படைகள் இருந்தன. மண்டலங்கள் தோறும் உயர் அதிகாரிகள் அலுவலர்கள் கீழ்ப்படிந்து அரசகருமமாற்ற இருந்தனர்.

இன்றைய பிரித்தானியா என்னும் ஐக்கிய இராச்சியம் பதினெரும் நூற்றாண்டில் வளர்ச்சிப்பெறத்தொடங்கி மூந்நூற்றைம்பது ஆண்டுக்காலத்தில் முடிசூடிய குடியரசு (Crowned Republic), நலம்புரி அரசு (Welfare State) என்றெல்லாம் பெயர்கள் மலர நிலவுகின்றது. இந்த அமைப்பிலும் பார்க்கப் புகழ்பெற்ற தன்மையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இராசராசன் தன் நாட்டை மலரச் செய்திருந்தான்.

நாட்டின் இறை என அவன் அரசு வீற்றிருந்த போதிலும், குடிமக்கள் தனித்தனி தாமே அரசன் எனக் கருதித் தத்தம் தலைமேல் முடியிருப்பதாகப் பாவனை செய்து, தலையைத் தடவிப் பார்க்குமளவில் அவன் அதிகாரத்தைப் பரவலாகப் பங்கீடு செய்திருந்தான். மாநில ஆட்சிமுறை, மாவட்ட ஆட்சிமுறை என்பன போன்ற உள்நாட்டு ஆட்சிமுறைகள் அவன் காலத்தில் நன்றாக வளர்ச்சி பெற்றிருந்தன. அன்று கிராம ஆட்சிமுதல் பெரும் பிரதேச ஆட்சிவரை அவனுடைய உள்ளூர் ஆட்சி பரவலாக நிலவியது. இராசராசனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்களை முன்னிட்டும், விருதுப்பெயர்களை முன்னிட்டும் கிராமப்புரங்கள் இராசராசச்சேரி, இராசமார்த்தாண்டச்சேரி, அருள்மொழிதேவச்சேரி, ஜனநாதச்சேரி, நித்தவிநோதச்சேரி, இராசகேசரிச்சேரி, நிகரிலிசோழச்சேரி, சிங்களாந்தகசேரி என்வெல்லாம் வழங்கின.

அரச அலுவலர்களின் வரிசை பெரிது. அவர்களுள் நிலம் அளப்பவர், நில மதிப்பீட்டாளர், வரி விதிப்பவர், வரிகளை அளவிடுவோர், வரிகளைக் கணக்குப் பொத்தகத்தில் பதிவுசெய்வோர் முதலானோர் இருந்தனர். இன்னும் வாணிபத்துறையில் வரி திரட்டுவோர், பிறவிதவரிகளை அளவிடுவோர், ஊரவை என்னும் உள்ளூராட்சியைக் கவனிப்போர், அறங்கூறும் அவையினர், படைத்தலைவர்கள், நடு அரசாங்க (Central Goverment) அலுவலர்கள், அதிகாரிகள் முதலானோரும் இருந்தனர். இராசராசன் அமைத்த அதிகாரவலுவுள்ள மத்திய அரசு இரு நூற்றாண்டுகளுக்கு மேலாக வலுக்குறையாமல், சீர்குலையாமல் நிலவியது. இராசராசனுக்கு உதவியாக இருந்த உயர் அலுவலாளன் மூவேந்த வேளாளன் என்பான் ஒருசிற்றரசன் என அறியக் கிடக்கிறது. இங்ஙனமே மூவேந்த வேளாளன் எனப் பெயர் பெற்ற வேறு சிலர் கோயிற்பணிகளை மேற்பார்வை செய்து வந்தனர். கோயிற்பணிகளை விசுவாசத்தோடு கவனிப்பதற்குத் தன்னைத்தயாரித்தவன் உத்தம சோழனின் மைந்தன் மதுராந்தகன் கண்டராதித்தனவன். இராசராசனின் அரசகாரியப் பெரும்பொறுப்பை நடத்தியவன், முன்னரே உத்தமசோழனின் பெருந்தரத்து அதிகாரியாயிருந்த குவளாலமுடையான் அம்பலவன் பழுவூர் நக்கன் விக்கிரம சோழமாராயன் என்னும் பெரியவனவன், இவன் விஜயமங்கலத் திருக்கோயிலைக் கற்றளியாக்கியதோடு, நெடுவாயில் என்னும் ஊரைத்திருக்கோயிலுக்கு எழுதிக்கொடுத்து, நூறுகழஞ்சு பொன்னும் உபயஞ்செய்தவன் இராசராசன் இந்த அதிகாரிக்கு இராசராசப் பல்லவரையன் என்னும் பெரும்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

மண்ணினில் மட்டும்...

விண்ணைக் குடைந்தனன் வீதிசமைத்தனன்
விண்ணில் வீம்பு நடையுமிட்டனன்
விண்ணைக் கடைந்திட விமானம் கொண்டனன்
மந்திரம்போல் பல நாடு கடந்தனன்

சந்திரன் சென்றனன் செவ்வாயும் காண்பனும்
சந்திரன் தன்னில் செருக்காய் நின்றனன்
எந்திரம் கொண்டவன் கடலில் புகுந்தனன்
ஏழு கடலிலும் மிருக்காய் திரிந்தனன்

மண்ணைக்குடைந்தனன் சுரங்கம் சமைத்தனன்
அங்கேயும் வீரப் பெருநடையிட்டனன்
மண்ணினில் மட்டும் சரியாய் நடந்திட
மனிதனுக்கேனோ தெரிந்திடவில்லை.

— வடகோவை வரதராஜன்

இன்னும் ஒரு திங்கள்

(குறுங்காவியம்)

புலவர் ம.பார்வதிநாதசிவம்

[5]

கர்ப்பூர வாசனையை மாலை தன்னைக்
கணித்தறியா ராஜனென்பான் கோதை என்ற
குற்றமிலா மங்கையினை வீட்டினிற்கே
கொண்டுசென்றான் வீடுசென்ற கோதை தானும்
"உற்றபெரும் துயராலே கண்ணீர் சிந்தி
உளத்தெழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டே
குற்றமென்ன நான் புரிந்தேன் எதற்காய் என்னைக்
கூட்டிவந்தீர் விழாமுடியு முன்னே" என்றாள்.

"திங்கள்பல கலைநிகழ்ச்சி சிறந்தற்காகச்
செகத்திடைநான் செய்தபெரும் உழைப்புத் தன்னை
அங்குசிறு பொழுதிருந்து பார்க்கா வண்ணம்
அழைத்துவந்தீர் என்னுடனே கற்பிக்கின்ற
மங்கையரும் அதிபரும்நம் குடும்பம் பற்றி
மனத்தென்ன நினைப்பரெனச் சிந்தித் தீரா
எங்கென்ன குழப்பமென எதுவும் தேரன்
ஏன் மௌனம்" என்றவளும் கேட்கலானாள்.

"குற்றமின்றி யாரேனும் கொதித்தல் உண்டோ
குற்றமுண்டு கூறுதற்காம் சந்தர்ப் பம்தான்
உற்றிடும்போ தினில் உரைப்பேன்" என்றே அன்னான்
உரைத்திடலும் பூங்கோதை அவனை நோக்கிக்
குற்றமுளார் தமைநல்லோர் ஆக்கு தற்கே
கோட்டினிலே வாதாடி வீட்டில் வந்தே
குற்றமிலார் தம்மீது குற்றங் காணும்
கொள்கை பெந்தச்சட்டநூல் ஞானம் என்றாள்.

"கற்பனையாற் கவிதைமுதற் கலைகள் யாவும்
காலமெலாம் வளர்த்திடலாம் குடும்பம் என்னும்
பொற்பமைந்த விருட்சத்தை வளர்ப் தற்கும்
போய்வந்தக் கற்பனையைச் செய்தல் நன்றோ
பற்பலநான் கூறவில்லைக் குறைகள் இன்றிப்
பாரிடையே அமைந்திட்ட எங்கள் வாழ்வை
அற்பநிலைக் காக்காதீர்" என்றே கூறி
அழுதபடி மன்றாடிக் கேட்டாள் கோதை.

கல்லூரி வாசலிலே மறுநாட் காலை
கவலையுடன் பூங்கோதை அடைந்த காலை
நல்லுளமும் கருணையுமே கொண்டாளான
நளினிஎனும் ஆசிரியை விரைந்து வந்தே
"அல்லலுற்றே கலைநிகழ்ச்சி அதனைத் தானும்
அணுகமன மில்லாமல் இருந்தேன் நேற்றே
சொல்லுகநின் கணவனேன் நேற்றுக் கோலம்
கொண்டிட்டான் என்பதையும்" என்றே கேட்டாள்.

என்னிடத்தே ஏதோஓர் குற்றம் தன்னை
என்கணவர் கண்டதுபோற் சீறுகின்றார்
என்னகுற்றம் என்றவரை நானே கேட்டேன்
எதனையுமே உரையாமற் சினம்கொள்கின்றார்
நன்மைநிறை நெஞ்சுடையாய் அவர்கண்ணுக்கே
நல்லவராய் யாவருமே தெரிவதில்லை
என்னகுறை எங்குகுறை என்பதெல்லாம்.
எப்படியும் சிலநாளில் தெரியும் என்றாள்.

பூங்கோதை தனைநோக்கி நளினி என்பாள்
பொற்றொடியே கலங்காதே ஆரம்பத்தில்
ஈங்கிதுபோல் ஒருவரினை ஒருவர் தாமும்
என்னளவும் புரியாமற் சினத்தல் உண்டு
தீங்கேது நன்றேதென்றுயும் தன்மை
சிலகாலம் சென்றபின்தான் வந்து சேரும்
ஏங்காதே நின்வாழ்வு நொறுங்க வில்லை
இருந்துபார் சிலநாளில் யாவும் மாறும்"

"ஆனாலும் ஒன்றுரைப்பேன் ஆண்கள் தம்மில்
அனவற்றோர் சந்தேகம் என்ப தான
வீணான மனநோயால் விடமுண் டார்போல்
வெந்துகொண்டே இருப்பார்கள் இன்ப மென்னும்
தேனூற்றைப் பருகாதே இளமை முற்றும்
சென்றபின்தான் அவர்களுக்கு ஞானம் தோன்றும்
மானேநீ வருந்தாதே நின்தன் பண்பை
வையகமே முற்றாக அறியும் அன்றோ."

"அன்பாலே மாணவரைக் கொள்ளை கொண்டாய்
அருமுழைப்பால் நிர்வாக மதிப்பைப் பெற்றாய்
பண்பாலே ஊரவர்க்குத் தெய்வ மானாய்
பாவையர்க்கோ வழிகாட்டும் நூலும் ஆனாய்
என்னே இவ் வழகென்றே கண்டோர் யாரும்
எண்ணுகின்ற பெருவனப்பும் நின்பாற் கொண்டாய்
பின்னேனோ வருந்திடுவான் கணவன் உன்தன்
பெருமனதைச் சிலநாளிற் புரிந்து கொள்வான்."

என்றெல்லாம் ஆறுதல்கள் நளினி கூற
ஏந்திழையாள் கண்கலங்கிக் கேட்க அப்பால்
நின்றபல மாணவரும் விரைந்து சூழ்ந்தே
"நீங்கள்ஏன் கலைநிகழ்ச்சி முடியு முன்னர்
சென்றீர்கள் ரீச்சரெனக் கேட்க லானார்
சேயிழையாள் தன்துயரை மறைத்த வாறே
"நன்றாக நிகழ்ச்சியெல்லாம் நடந்த வென்றே
நானறிந்தேன் அதுவொன்றே போதும்" என்றாள்.

[தொடரும்]

குறுநாவல்

விமானங்கள் மீண்டும் வரும்...

நெல்லை க.பேரன்

விடுமுறையில் ஊருக்குத் திரும்பியபோது சங்கருக்கு வரவேற்புப் பலமாக இருந்தது. திருமணம் நிச்சயமான காரணத்தாலோ என்னவோ அக்கா திலகம் கலகலப்பாகக் காணப்பட்டாள். வீட்டில் புதிய தையல் மெஷினின் கட கட சத்தம் காதுக்குக் குளிர்ச்சியாக இருந்தது.

சங்கர் வந்ததைக் கேள்விப்பட்ட தரகர் முருகேசர் விடியற்காலையிலேயே வாயில் சுருட்டு மணக்க வந்து விட்டார்.

'அம்மான் இந்தாருங்கோ... ரொத்மன் சிகரெட்... உங்களுக்கெண்டு ஏயாப்போட்டிலை டியூட்டி பிறீ ஷொப்பிலை வாங்கிக்கொண்டு வந்தனான். முருகேசர் மகிழ்ச்சியில் கடைவாய்ப் பல் தெரியச்சிரித்தார்.

பேந்தென்ன என்னை நினைச்சுப் பொடியன் வாங்கியந்திட்டான்...ம்... அதெல்லாம் கிடக்கட்டும்... பேசினபடி மாப்பிள்ளை வீட்டாருக்கு முப்பதாயிரம் இனும் குடுக்க வேணும். பொடிச்சி திலகத்திற்கு இந்த ஒண்டரைப்பரப் புக்காணியும் வீடும் குடுக்க வேணும். அளவான நகை நட்டுப்போதும்?

முருகேசர் தொடர்ந்தார்.

சங்கருக்கு நெஞ்சு திக்கென்றது. ''இருக்கிற எல்லாக்காணியையும் அக்காவுக்குக் கொடுத்திட்டால் புவனம் கமலா இருவருக்கும்...''

''என்ன தம்பி யோசிக்கிருய்... வெளிநாட்டிலை உழைக்கப் போனனி இப்படி யோசிக்கிறதே... எல்லாம் கிடைக்கிற காலத்திலை கிடைக்கும் தம்பி... இப்ப ஓம் எண்டு சொல்லும்... வாற புதன்கிழமைக்கே முருகையன் கோயிலடியிலை தாலி கட்டை வைப்பம்...

சங்கருடைய மௌனத்தைப் புவனம் கலைத்தாள் 'அண்ணை அக்காவின்ரை விஷயம் இப்ப முடியட்டும்... நாங்கள் விஸ்வமடுவிலை எண்டாலும் போய் இருப்பம்— பாவம் அக்கா பலகாரம் சுட்டு இவ்வளவு நாளும் கஷ்டப்பட்டவ... அவவை நல்லாய் வாழவைக்கவேணும்'

கமலாவின் குரல் பலமாகவே ஒலித்தது. 'அண்ணை நான் ஏ எல். பாஸ் பண்ணிப் போட்டு ரீச்சிங்குக்குப்போடப் போறன்... நீங்கள் ஒண்டுக்கும் கவலைப்படவேண்டாம்...'

சரி அம்மான் எல்லாம் நல்லபடியாய் நடக்கட்டும்' சங்கர் பதில் சொல்லிவிட்டான்.

புதன்கிழமை முருகன்கோயிலில் திலகத்தின் திருமணம் ஆடம்பரமில்லாமல் அமைதியான முறையில் சிறப்பாக நடைபெற்றது.

பதினைந்து நாட்களில் சங்கர் மறுபடியும் குவைத்துக்குப் பயணமாகிவிட்டான்.

சங்கரின் வாழ்க்கை மறுபடியும் குவைத்தில் சீமெந்துக் கொம்பனியில் உருளத் தொடங்கியது. இவ்வருடம் பெரிய முதலாளி வந்து எல்லாருக்கும் சம்பளம் கூட்டியிருந்தார். சங்கருக்கு நூற்றி நாற்பது டொலர் கிடைத்தது

இம்முறை புவனத்தை மனதில் வைத்துக்கொண்டு சங்கர் கடுமையாக உழைக்கத் தொடங்கினான். பகல்வேலை முடிந்ததும் இரவில் ஹச்கிளீன் பண்ண ஆட்கள் தேவை என்று அறிந்தால் பாஜ்ஜிலேயே எங்காவது சீமெந்துப் பைக்கட்டுக்களின் மத்தியில் படுத்து உறங்குவான். தேவையான நேரத்தில் எழுப்பி விடும்படி இரவு எஞ்சினியரிடம் சொல்லிவிட்டுப் படுப்பான்.

சீமெந்தை இறக்கியதும் எவ்வளவு விரைவாகக் கப்பலைச் சுத்தப்படுத்தி அனுப்புகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக அடுத்த கப்பல் வந்துசேரும். மேலும் இதனால் கொம்பனிக்கும் நிறைய லாபம் கிட்டும்.

அன்று வியாழக்கிழமை மறுநாள் லீவுதினம் என்பதால் டுபாயின் 'ராஸல்கைமா' துறைமுகத்தில் அருகே வந்த 'சாம்' என்ற கப்பலைச் சுத்தப்படுத்தி விரைவாக அனுப்பவேண்டும். இரவு ஒரு மணிக்குப் பாதித்தூக்கத்துடன சங்கர் ஹச்சிற்குள் இறக்கப்பட்டான். அரைவாசித் தூரம் ஏணிப்படிகளில் இறங்கியவன் கால் தடக்கித் திடீரென்று ஐயோ என்ற அலறலுடன் அடித்தளத்தில் போய் விழுந்தான். திடீரென்று மயக்கமுற்றான்.

மற்றத் தொழிலாளர்கள் பரபரப்புடன் ஓடினார்கள். இரவுவேலைக்குப் பொறுப்பான எஞ்சினியரிடம் விஷயத்தைத் தெரிவித்தார்கள் எப்பொழுதும் தயாராக இருந்த டட்சன் 'பிக் அப்' வாகனத்தில் சாரதி வீரசிங்கம் சங்கரைத் தூக்கிக்கொண்டு சுவைபா துறைமுக ஆஸ்பத்திரிக்கு ஓடினான். சில தொழிலாளர்களும் எஞ்சினியரும் கூடவே சென்றிருந்தார்கள் சுவைபா துறைமுக டாக்டர் பார்த்து விட்டுக் கை எலும்பு முறிந்து விட்டது என்றும் உடனே அல் அடான் அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும்படியும் துண்டு கொடுத்துவிட்டார்

[6]

'பிக் அப்' அல் அடானை நோக்கிப் பறந்தது இயல்பாகவே வேகமாக ஓட்டும் சாரதி வீரசிங்கம் இப்போது மணிக்கு நூற்றைம்பது மைல் வேகத்தில் பறந்தான்

அங்கே வெளிநாட்டு வைத்தியர்கள் சங்கரைப் பரிசோதித்தார்கள் கம்பியூட்டர் எக்ஸ்ரே எடுத்துத் தள்ளியது. உடனே சத்திரசிகிச்சை அறைக்கு அனுப்பினார்கள்

மறுநாள் வெள்ளிக்கிழமை என்பதால் சக தொழிலாளர்களும் காம்ப் மனேஜரும் பஸ்ஸில சங்கரரைப் பார்க்கச் சென்றார்கள், காம்ப் மனேஜர் ஒரு அராபியர் சங்கர் ஆஸ்பத்திரியில் இருக்கும் வரைக்கும் கொம்பனி றைவரிடம் ஒழுங்காகச் சாப்பாடு கொடுத்து அனுப்பினார் சூப் பழவகைகள் கொடுத்து அனுப்பினர். பாஜ் மனேஜர் மிகவும் கண்டிப்பானவர் என்றாலும் இரக்ககுணம் படைத்தவர். சங்கர் கஷ்டப்பட்டு வேலை செய்வது அவருக்குத்தெரியும். கைமுறிவு பொருந்தப்பட்டு நன்கு குணமாகி வரும் வரைக்கும் சம்பளத்துடன் விசேட லீவு வழங்கினார்.

றைவர் சிவா, தயாரத்தினு எல்லோரும் சங்கரை அடிக்கடி போய்ப்பார்த்தார்கள்.

இரண்டு வாரத்தில் சங்கர் ஆஸ்பத்திரியில் இருந்து வந்துவிட்டான். மறுபடியும் காம்பில் ஒரு வாரம் ஓய்வெடுத்தான்; காம்ப் வைத்தியர் அதற்கான அத்தாட்சிப் பத்திரத்தை வழங்கினார். ஞாயிற்றுக் கிழமைகளில் இற்றுக்குப் பெண்களைத் தேடிப் போகும் தொழிலாளர்கள் அன்று தமக்குச் சுகமில்லை என்று சாட்டுச் சொல்லிக் காம்ப் வைத்தியரிடம் லீவு கேட்பார்கள். கொம்பனிச் சட்டப்படி வருடத்தில் பதினைந்து நாட்கள் சுகவீன லீவு கிடைக்கும்.

சங்கர் இப்போது ஹச்கிளீனிங் செய்வது இல்லை. மெஸ் போய் வேலையோடு நிறுத்திக் கொண்டான். முன்னர் போல நன்றாக உழைக்கமுடியவில்லை. லீவு நாட்களில் சூரியுடன் செய்து வந்த பிறைவேற் வேலைகளையும் நிறுத்திக்கொண்டான்.

கொம்பனி முதலாளி கிறிஸ்தவர் என்பதால நத்தாரை முன்னிட்டு எல்லோருக்கும் ஒரு மாதச் சம்பளம் போனஸ் ஆகக்கிடைத்தது எஞ்சினியர்களுக்கு ஒன்றரை மாதமும் கொடுத்தார்கள் காம்ப் கன்ரீன் அறையில் கிறிஸ்மஸ் மரம் நாட்டி மின்விளக்குகளாலும் வர்ணக் கடதாசிகளாலும் சோடித்தார்கள். சில கிறிஸ்தவத் தொழிலாளர்களுடைய அறைகளும் சோடிக்கப்பட்டன. முதலாளி வந்து எல்லோருக்கும் கேக்கும் வான் கோழி இறைச்சியுடன் புரியாணிச் சாப்பாடும் வழங்கினர். அன்று நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு விசேட பூஜைகளைக் காண்பதற்காக ஆமதி சேர்ச்சுக்கும் கொம்பனி பஸ்களில் எல்லோரும் புறப்பட்டார்கள். அன்றிரவு காம்புக்கு அந்தோனி வருவதாகச் சொன்னபடியால சங்கர் தேவாலயத்திற்குப் போகவில்லை. சரியாகப் பன்னிரண்டு மணிக்கு அந்தோனி இன்னொரு நண்பனின் காரில் வந்தான். சங்கரைக் காம்புக்கு வெளியே தனியான இடத்தில் கூப்பிட்டுக் கதைத்தான் காருக்குள் அவனுடைய காதலியும் இருந்தாள். தான் அவளைக் குவைத்தில் திருமணம் செய்யப் போவதாக அந்தோனி தெரிவித்தான். சிறிதுநேரம் இருந்து கதைத்துவிட்டு அவன் போய்விட்டான்.

ஊருக்குப்போய் வந்த சங்கரின் குடும்பத்தாரின் புதினங்களையும் வேறு பிரச்சினைகளைப் பற்றிய செய்திகளையும் அறிந்துகொண்டு அந்தோனி போய்விட்டான். முதல் ஒரு கொம்பனி விசாவில் வந்தவர்கள் வேறு இடத்தில் களவாக வேலை செய்தால் மூன்று மாதங்களுள் பழைய கொம்பனிக்குத் திரும்பிவிடவேண்டும். இல்லாவிடில் சொந்த நாட்டிற்கு அவர்களைக் கூப்பிட்ட கொம்பனியே அனுப்பிவிடவேண்டும். தவறினால் தண்டனை வழங்கப்படும் என்று சட்டம் இயற்றப்பட்டு விட்டது.

இதனால் பக்கீரும் அந்தோனியும் வேறு சிலரும் விரைவில் நாடு திரும்பவேண்டியிருந்தது. அந்தோனி தான் வேலை செய்யும் சுருஜ் முதலாளியுடன் கதைத்து அவர் மூலம் புதிய விசா பெறுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டான். எதற்கும் இலங்கை போய்த்தான் திரும்பவேண்டும். கூடிய விரைவில் தான் இலங்கைத் தூதுவராலய அதிகாரிகள் மூலம் கொம்பனிக்கு வந்து பாஸ்போட்டையும் ரிக்கற்றையும் வாங்கிக்கொண்டு ஊர்போகப் போவதாயும் பிறகு வேறு கொம்பனி விசாவில் குவைத்துக்கு வரப்போவதாயும் அந்தோனி சொல்லியிருந்தான். அவன் மறுபடியும் வர விரும்புவது அந்தக் காதலிக்காகவே தவிர அவனுடைய குடும்பத்திற்காக இல்லை என்பது சங்கருக்குப் புரியாமலில்லை. சேற்றில் அகப்பட்டவனைக் கரைசேர்க்கமுடியாமல் தவித்தான்.

சங்கருக்குக் கேரளத்து முதலாளியின் சாப்பாடு சலிக்

(8-ம் பக்கம் பார்க்க)

ரோஜாவும் துளசியும்

மன்னன் அமைத்த மலர்வன மதிலே
மன்னன் மகளும் மலர்க்கரம் கொண்டே
மலர்களைக் கொய்தாள் ரோஜா மலரைக்
கொய்யும் போதில் கையிலே முட்கள்
கடிதினில் உறுத்தின நொந்த உளத்துடன்
தந்தைபால் வந்து நடந்ததைச் சொல்லி
மடந்தை சென்றுள் மன்னன் உடனே
பக்கலில் நின்ற பணியாளரிப் பணிக்க
அவர்களும் சென்றே அழகிய ரோசினை
வேருடன் கல்லி வெளியே எறிந்தனர்
அடுத்த நாளில் அரசன் மகளும்
மலர்வனம் நண்ணி மலர் எடுப்பதற்காய்
சென்று பார்க்கையில் ரோசாச் செடிகள்
இருந்த இடமே தெரியா தெல்லாம்
பிடுங்கி எறிந்த செய்தி கேட்டு
துன்பம் உறந்த தூரவே நின்ற
துளசித் தாயின் தளிர்கள் கொய்தே
தலைவன் தாளை வணங்கியே நின்றுள்
அவள் செயல் கண்டே துளசியாளும்
புன்னகை பூத்தாள் புதுமையை எண்ணினுள்
இத்தனை காலமும் என்னைச் சீண்டாது
சென்றனை ஏனோ என்றே வினவிய
பாங்கில் வெதுவெதுப் புற்றனள்
காவலன் மகளின் கண்ணியக்குறைவை
எண்ணிப் பார்த்தே ஏளனம் செய்தனள்
எண்ணரும் உலகின் மாண்பினைக் கண்டே
திண்ணிய துளசியும் திகைத்து மணந்தனள்
மனித இயல்பின் மாண்பினைக் கண்டே
மனமகிழ்ந்தனளே மாண்ணுழிக் துளசியும்

—முருகவே. பரமநாதன்

சுத்தமான

விளவு கற்பூரம்

சீனவின் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடனும், சீனவின் தரத்திற்கு அமையவும் முதன் முதலாக இலங்கையில் தயாரிக்கப் பட்டது.

இப்பொழுது தாராளமாக கிடைக்கும்.
மொத்த வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு!

தொடர்பு கொள்ளவும்:

விநியோகஸ்தர்:

பிரபா ட்ரேடிங் கம்பெனி,
31-31A, கபோஸ் லேன், கொழும்பு-11.
Phone: 29426

இவ்வாரம் எப்படி?

இன்று

மாதம்—புரட்டாதி
திகதி— 6 (1985-9-29)
ஞாயிற்றுக்கிழமை
திதி—பிரதமை
நக்ஷத்திரம்—உத்தரட்டாதி

மேடம்

வெளியிடத் தொடர்புகள் சிறப்பைத் தரலாம். படித்தவர்களுக்குக் கௌரவம் கிட்டும். பல வழிகளிலும் ஆதரவு கிடைக்கும். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டும். காதலர்களுக்கும் கண்ணியமான தினம்.

இடபம்

எண்ணிய காரியத்தில் தடையும் உள்ளத்தில் வேதனையுமுண்டு. எக்காரியத்திலும் முன் யோசனையுடன் நடந்து கொள்ளவும். முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். இவ்வாரம் தொழில்துறைக்கும் வித்திடப்படலாம், விழிப்புடனிருக்கவும்.

மிதுனம்

தாய்வழிப்பெருமையும் அவ்வழி லாபமும் கிட்டும். உயர் கல்வியில் ஆர்வம் பிறக்கும். புதிய பொருள்களை கொள்வனவு செய்யலாம். தொழிலில் நன்மாற்றம் ஏற்படலாம் சுபகருமங்களும் இடம்பெறலாம்.

கடகம்

பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும். முதலீடு செய்வதற்கு உகந்தவாரம். நீர்த் தொழில் விருத்திக்கு இடமுண்டு புத்திரர்புகழ்மேலோங்கும். அதிஷ்டதேவதையின் அணைப்பும் கிட்டும்.

சிங்கம்

பகைவர்கள் காத்திருப்பர். பதற்ற நிலையும் தோன்றும். விஷப்பரீட்சைமூலம் விபரீதங்களும் விளையலாம். மற்றவர்களிடத்தில் நம்பிக்கை வைப்பதைத் தவிர்க்கவும். வீண் பிரச்சினைகளும் வந்து சேரலாம். அடக்கம் நன்று.

கன்னி

புதிய பிரயாணங்கள் மேற்கொள்ளப்படலாம். இவருக்குத் திருமணத்திற்கு அத்திவாரமிடப்படலாம். குடும்பத்தில் குதூகலம் உண்டு. தனவரவுமுண்டு. தனியார் தொழில்துறையில் திருப்தி காணப்படும். மகிழ்ச்சிகரமான வாரம்.

துலாம்

கடன் தொல்லைகள் அதிகரிக்கலாம். அதிகாரக் குறைவிற்குமிடமுண்டாம். தொழில்துறையும் கவலைதரும். பெண்களுக்கு அவதானம் வேண்டும்.

விருச்சிகம்

நீண்ட நாள் மனக்குறை நிவர்த்தியாகும் பொதுப் பணிகளில் ஈடுபடுவீர்கள் புதுமையான எண்ணங்களும் தலைதூக்கலாம். பிதாவழிப் பெருமையுண்டு. தொழில் விடயத்தில் சுமுகமான நிலை தென்படும்.

தனுசு

கனிவான சம்பவங்கள் இடம் பெறும். இலட்சியவாதிகளுக்கு இன்பகரமான வாரம் சிலருக்குத் தொழில் வாய்ப்பிற்கு இடமுண்டு. டாக்டர்களுக்குச் சிறப்பான வாரம், வாழ்விலும் வளமான திருப்பம் தென்படும்.

மகரம்

சகோதர சந்தோஷமுண்டு. அதிர்ஷ்ட லாபங்களும் கிட்டும் பொருள் வரவுமுண்டு வணிகர்கள் நன்மையை எதிர்பார்க்கலாம். இசைத் துறையில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

கும்பம்

தொழில்த் துறையில் வீழ்ச்சி தென்படும் வீண் பழிகளும் ஆளாவீர்கள். வஞ்சகர் வலைவிரிப்பர். குடும்பத்தில் தொல்லைகள் அதிகரிக்கலாம் அவசரப் போக்கைத் தவிர்க்கவும். பொருள் விரையம் ஏற்படலாம்.

மீனம்

தீய சக்திகள் பலவழிகளிலும் உங்களை வீழ்த்தப் பார்க்கும் பூமியால் பிணக்கு ஏற்படலாம ஆணவப்போக்கினால் அடி சறுக்க நேரிடலாம். கடமையாற்றுமிடத்தில் அவதானம் வேண்டும். விழிப்புடனிருக்கவும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

வானொலி அலைவரிசைகள் என்றால் என்ன?

— பால. சண்முகநாதன்

வானொலி வைத்திருக்கிறோம், கேட்கிறோம் பெட்டியின் கண்ணாடி முகப்பிலே MW-SW-FM என்றெல்லாம் குறித்திருக்கின்றார்கள்.

MW மீடியம் வேவ் — மத்திய அலை வரிசை
SW சோட் வேவ் — சிற்றலை வரிசை
FM பிறெக்குவென்சி மொடுலேஷன் — பண்பலை வரிசை

பண்பலை குறுகிய தூரத்திற்கே கேட்கலாம் இது நேராகச் செல்வதே இதற்குக் காரணம். சிற்றலை நீண்ட தூரம் செல்ல வல்லது. உலகையே வலம் வருகிறது மத்திய அலை பண்பலையிலும் கூடிய தூரம் கேட்கலாம், ஆனால் சிற்றலையளவு கூடிய தூரம் செல்லாது. பண்பலை கேட்க விரும்பினால் ஒலிபரப்பு நிலையம் எவ்வளவு அண்மையில் உள்ளதோ அவ்வளவு தெளிவாக இருக்கும்

தொலைக்காட்சிக்கான ஒலிபரப்பு பண்பலை வரிசையிலேயே வருகின்றது. எனவே இதனையும் பண்பலை வானொலியில் செவிமடுக்கலாம். இதே போல் இலங்கை வானொலியின் பலவகைச்சேவைகளையும் கேட்கலாம் இவ்வகையில் தொலைக்காட்சிக்கான அன்ரெனா உதவும் வானொலிப்பெட்டியுடன் இணைந்துள்ள அன்ரெனாவையும் பூமி மட்டத்திற்குச் சமமாக வைத்து நாலாபுறமும் சுழற்றும் பொழுது எந்தத் திக்கில் ஓசை தெளிவாக வருகிறதோ அங்கே நிலைகொள்ள வைத்தால் நிகழ்ச்சிகளை நன்கு ரசிக்கலாம். நிலையத்திலிருந்து தூரத்திலுள்ள நேயர்கள் தனியாக அன்ரெனாவை முப்பது அடி உயரத்தில் அமைத்தால் இதே போல் இரசிக்கலாம். நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்

(10-ம் பக்கம் பார்க்க)

குறுநாவல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் வேளைகளில் சூரியிடம் போய்விடுவான். சூரியின் கொம்பனியில் சாப்பாட்டிற்குத் தனியாகப் பணம்கொடுக்கிறார்கள் அவனும் அவனது அறை நண்பர்களும் சேர்ந்து பொருட்களை வாங்கிச் சமைக்கிறார்கள். குளிர்ப்பெட்டியில் வைத்த கோழிஇறைச்சியை மிகவும் சுவையாகச் சமைப்பார்கள். அப்பளம், இறால், என்று பொரிப்பார்கள். மரீனா பீச் ஹோட்டலுக்கு அண்மையில் உள்ள கடற்கரைக்கு நடந்துசென்று குளித்துவிட்டு வந்து எல்லோரும் அறைக்குள் வட்டமாக உட்கார்ந்து பரிமாறிச் சாப்பிடுவார்கள்.

சூரியின் பொறுப்பான போக்கிலும் கஷ்டப்பட்டு உழைக்கும் ஆர்வத்திலும் சங்கருக்கு மிகவும் விருப்பம் இருந்தது ஒருநாள் இரவு சமாகக் கடலில் குளித்துக்கொண்டிருக்கும்போது சங்கர் தன் சகோதரி புவனத்தை கட்ட விரும்புவானென்று வாய் விட்டே கேட்டுவிட்டான். சங்கரின் குடும்பநிலை சூரிக்கு நன்கு தெரியும். தன்னுடைய தாயார் நிதானமான சீதனத்தை எதிர்பார்ப்பா என்றும் அதற்கு மறுத்தால் இக் கல்யாணத்தை விரும்ப மாட்டா என்றும் சொன்னான்.

"இந்தவருட உழைப்பெலாம் புவனத்தின் கல்யாணத்திற்குத்தான். நீ இம்முறை ஊருக்குப் போகும்போது இரண்டு பேருக்கும் எழுதிப்போட்டாவது வரவேணும் நான் உனக்கு [illegible] தருவன்' என்று சங்கர் நாசூக்காகக் கதைத்துச் சூரியின் மனத்தை மாற்றிவிட்டான்.

ஊருக்குக் கடிதம் எழுதினான். திலகம் தன் சேமிப்பில் கொஞ்சப்பணம் கொடுத்து உதவுவதாக எழுதினாள். சூரிக்குப் பெண் சகோதரங்கள் இல்லை என்பதால் தகப்பனாரின் வடலிக்காணி ஒன்று முதிசமாகக் கிடைத்தது. அக்காணியைத் திருத்தி வீடு கட்டித் தருவதாகச் சங்கர் ஒப்புக் கொண்டான்.

சூரி ஊருக்குப் போனபோது புவனத்திற்கும் அவனுக்கும் கலியாணஎழுத்து நடந்தது சூரி திரும்ப வரும்போது படங்களைக் கொண்டுவந்து சங்கரிடம் காட்டினான்

இந்தவருட உழைப்பு முழுவதும் புவனத்திற்கு வீடுகட்டுவதில் செலவானது வருடாந்த லீவுக்கு ஊர்போகாதுவிட்டால் போய்வரும் பிளேன் ரிக்கற்காசு கிடைக்கும். அதற்காகப் போகாமல் நின்று அந்தப் பணத்தையும் வாங்கிப் புவனத்திற்கு அனுப்பினான்

காலம் உருண்டு கொண்டிருந்தது. சங்கருக்கு வயது முப்பத்தி மூன்றைத் தாண்டிவிட்டது இளைய சகோதரி கமலாவின் பிரச்சினையையும் தீர்த்துவிட்டால் பிறகு அவன் தன்னுடைய கலியாணத்தைப் பற்றிச் சிந்திக்கலாம்.

தொழிலாளர்கள் யாராவது பாஜ் மனேஜரிடம் தமது கலியாணத்திற்காக லீவு கேட்டு வருவார்கள் அப்போது மனேஜர் பகிடியாக அவனைப் பார்த்து உமது கலியாணம் எப்போது என்று கேட்பார் ஒவ்வீசில் இருக்கும் கிளாக்கர் மனேஜருக்குச் சங்கருடைய குடும்ப வரலாறு. தியாகங்கள் எல்லாவற்றையும் சொல்லி யாழ்ப்பாணச் சமூகத்தில் சகோதரிகளுக்காக உழைத்து வாழும் உன்னதமான வலிபர் சமுதாயத்தைப் பற்றிப் பெரிதாக லெக்சர் அடிக்கத் தொடங்கி விடுவார் வெள்ளைக்காரர் புன்சிரிப்போடு கேட்டுவிட்டு எல்லாம் சுத்த அசட்டுத்தனம் என்று கேலி செய்வார்

சுடலையன் என்றொரு தமிழ் நாட்டு மெக்கானிக் இருந்தார் இவர் தனது சகோதரிக்காக எவ்வளவோ உழைத்துக் கொடுத்தாராம். கடைசியில் தந்தது காணாது என்று அவரைக் குறை சொல்லத் தொடங்கிவிட்டாளாம். போதாக்குறைக்கு அவளுக்கு வாய்த்த புருஷனும் தனக்குச் சீதனம் காணாது என்று மனம் புழுங்கத் தொடங்கிவிட்டாராம். இப்போது சுப்பையன் தமிழ்நாட்டிற்கே போகாமல் குவைத்தில் கேரளப் பணிப்பெண் ஒருத்தியைத் திருமணம் செய்துகொண்டு 'மெக்கா' வில் வாடகை அறையில் சுகமாகக் குடித்தனம் நடத்துகிறார் கமலாவின் கடிதம் இப்போது அடிக்கடி வரத்தொடங்கியது. தான் ஏஎல் பரீட்சை எழுதிவிட்டதாகவும் பல்கலைக்கழகப் படிப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லையென்றும் ஆனால் யாழ்ப்பாணத்தில் பிறைவேற்று எக்கவுண்டன்சி அல்லது கொம்பியூட்டர் சயன்ஸ் படிக்க எண்ணம் கொண்டிருப்பதாயும் அதற்குப் பணம் அனுப்பும்படியும் எழுதியிருந்தாள் அக்கா திலகத்திற்கு இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்திருப்பதாயும் அவைக்கு ஏதாவது பணம் அனுப்பினால் நல்லது என்றும் எழுதியிருந்தாள் அடபாவமே இரட்டைக் குழந்தைகள் அதுவும் பெண்குழந்தைகளா- சகோதரிகளுக்காக உழைத்துப் பிறகு மருமக்களுக்கும் உழைக்கவேண்டி வருமா...... என்று சங்கர் பயந்தான்.

[வளரும்]

காதல் வெளிச்சம்

மகள்
நீண்ட நேரம்
இரவில் விழித்திருந்து
படிப்பாள்
எதிர் வீட்டிலும்
சிவப்பு விளக்கு
நீண்ட நேரம்
எரியும் பச்சை
விளக்கு நேற்றிரவு
தெரிந்தது!
இன்று காலை
எழுந்து பார்த்தேன்
மகளை இல்லை
எதிர்வீட்டுச்
சிதாவும் இல்லையாம்

—ஜனனி புஷ்பநாதன்.

இராசராசனின்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டமும் கொடுத்திருந்தான். பழுவூர் நக்கன் திருக்கோயில் நிர்வாகஞ்செய்ததோடு பிராமணர்கள் குற்றம்புரிந்தால் கழஞ்சுக்கணக்கில் தண்டம் விதிக்கவும் அதிகாரம்பெற்றிருந்தான். இன்னும் இவனே கோயில் நிர்வாகிகளை நியமிக்கும் பெரும்பொறுப்பும் பெற்றிருந்தான்.

இராசராசன் காலத்தில் அவனுடைய பெருநாடு ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பது பல கல்வெட்டுகளால் அறியக் கிடக்கிறது. அவை அருள்மொழிதேவ வளநாடு க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, உய்யக்கொண்டான் வளநாடு நித்தவிநோத வளநாடு. பாண்டிய குலாசனி வளநாடு. கேரளாந்தகவளநாடு, இராசாசிரிய வளநாடு, இராசராச வளநாடு. இராசேந்திர சிங்க வளநாடு என்பனவாகும், இங்ஙனம் வளநாடுகளாகப் பிரிக்கப்பட்ட பிரதேசங்கள் ஒவ்வொன்றும் பலநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன இங்ஙனம் நாடுகளாகப் பிரிக்கப்பட்ட பகுதிகளில் பொய்கை நாடு என்பது ஒன்று அந்த நாட்டில் பரிபாலனப் பொறுப்பை மேற்கொண்ட ஒருவன் பொய்கைநாடுகிழவன் எனவே கல்வெட்டுகளில் புகழ்பெற்றுள்ளான் ஆதித்த சூரியன் என்னும் இயற்பெயர் பூண்ட இவனுடைய சிறப்புப்பெயர் மூவேந்த வேளாளன் என்பதாகும். இவன் செய்த பலவித அறப்பணிகள் காரணமாக இவனுடைய பெயர் கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளது ''ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார்க்கு ஸ்ரீ காரியம் செய்கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளாளன்'' என்பது கல்வெட்டு வாசகம்

அந்த அதிகாரி இராசராசன் மீது பேரன்பும் பேரபிமானமும் கொண்டவன் சிவபெருமான் மீதும் சிவனடியார் மீதும் பற்றுள்ளம் கொண்டவன். இவன் 994 ஆம் ஆண்டில் திருச்சோற்றுத்துறைச் சிவன் கோயிலுக்கு வெண்சாமரை, இராசத்தி விளக்குகள், நெந்தாவிளக்கு முதலியவற்றுக்குப் பொன்கொடுத்துள்ளதோடு. திருப்பதியம் பாடினோர்க்கு நெல்லும் பொன்னும் கொடுத்துள்ளான் இன்னும் அத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள துர்க்கை பரமனுக்குத் திருவமுதின் பொருட்டு நெல்லும் காசும் வைத்துள்ளான் இவற்றைவிட இரண்டு திருவிழாக்களுக்கும் ஆவன செய்துள்ளான் என அறியக்கிடக்கிறது. (வளரும்)

கந்தவேள்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கின்ற இடத்திலிருந்து கிழக்குப்பக்கமாகக் குன்றக்காமம் என்ற தோட்டம் இருந்தது. சதாசிவப் பெருமான் வந்தபோது அத்தோட்டத்தில் மக்கள் குழுமி நிறைந்திருப்பதைக் கண்டான். அடங்கா ஆவலுடன். ''அங்கு ஏன் கூட்டம்?'' என்று அவ்வழிவந்த ஒருவனை அவன் கேட்டான்

வழிப்போக்கன் அவனை வியப்புடன் பார்ப்பதாகப்பட்டது ''சுபநிட்ட முனிவர் ஆச்சிரமம் அது நீர் கேள்விப்பட்டதில்லையா?'' 'இல்லை'' யெனத் தலையசைத்தான் சரிய பெருமாள். அவனை அறியாமல் குன்றக்காமத் தோட்டத்தினுள் பிரவேசித்து, ஆச்சிரம வாசலில்வந்து தரித்து நின்றன.

பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் கருணை முகத்துடன் துறவி ஒருவர் ஆசிரமத் திண்ணையில் அமர்ந்திருந்தார். அவரிடம் பலர் தங்கள் குறைகளை கூறித் தெளிவு பெற்றனர். நீண்டநேரம் ஒதுங்கிநின்று அங்கு நிகழ்பவற்றினை அவதானித்துக் கொண்டு பயபக்தியுடன் அவன் நின்றிருந்தான்.

துறவியைத் தரிசிக்க வந்த மக்கள் கலைந்துபோன வேளையில் அவர் நிமிர்ந்து அவனைப் பார்த்தார்

''ஐயனே'' என சதாசிவபெருமான் அவர் முன் பணிந்தான், அவர் அவனை ஆழமாகப்பார்த்தார். அவர் விழிகளில் வியப்புமேவிட்டது.

''மகனே, நீ பெரும்பாக்கியம் செய்தவன். இந்த இராச்சியத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகின்றவன் உனக்கு மகனாகப் பிறப்பான்.''

சதாசிவப் பெருமான் ஒரு கணம் வியப்பும் மறுகணம் அவநம்பிக்கையும் அடைந்தான் துறவி எழுந்து ஆச்சிரமத்தினுள் சென்றார்.

மீண்டும் ஒரு தடவை அந்த மயிலின் அகவல் அவனுக்குக் கேட்டது.

எமது சிறுகதை

கண்ணீர்

அல்லைப்பிட்டியூர் த. தவபாலன்

தென்றலை முத்தமிட்டுத் தெருவோரத்திலே நடந்து வந்த ஆனந்தனின் உள்ளத்தில் அவன் முதல் நாள் இரவு கண்ட கனவே நிழலாடியது. அந்தக் கனவு நிஜமாகவே நடக்குமா? அவன் இதயத்தின் அடித்தளத்தில் ஒரு ஏக்கம். அவன் கண்ட அந்தக் கனவு மட்டும் நிஜமாக நடந்து விட்டால்... ஆனந்தனின் இலட்சியமே அதுதானே.

விடிகாலையிலே கனவு கண்டால் அது நனவாகும் என்பார்கள் அவனும் அந்தக் கனவைக் காலையிலே தான் கண்டான். தன் தங்கை நீலுவிற்குத் திருமணம் நடக்கும் இன்பமயமான காட்சி. உறவினர் சூழ்ந்திருக்க ஊர் மக்கள் வாழ்த்துரைக்கத் தங்கையின் கலியாணம். வீதியெல்லாம் அலங்காரம். தங்கையின் உடலெல்லாம் தங்க நகை. 'எப்படியப்பா இவன் ஆனந்தன் தங்கச்சிக்கு இவ்வளவு நகை போட்டு ஒரு பெரிய இடத்தில் சம்மந்தம் வைச்சவன்' என்பது ஊராரின் கதை. நாளாந்தம் கூலிவேலை செய்து வாழ்க்கையை ஓட்டும் ஏழை ஆனந்தன் கண்ட கனவு இதுதான். இந்தக்கனவு நனவாகுமா? 'ஏன் ஆகாது? நானும் ஒரு மனிதன் தான் என்றால் உழைத்து வாழ்க்கையில் முன்னேற ஏன் முடியாது?'- அவன் இதயம் அடித்தது. 'எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விட்டமாதிரி.'

பணம் சேர்க்க வேண்டும். அந்தப் பணத்திற்காக, தன் தங்கையின் நல்வாழ்விற்காக, தான் கண்ட கனவை நனவாக்குவதற்காக அவன் கடினமாக உழைத்தான். மாடாய் உழைத்தான்.

பூமி ஒரு முறை சுழன்றது. ஆம், வருடம் ஒன்று கழிந்தது. அந்த வருட முடிவில் அவன் தன் தங்கை நீலுவிற்கு ஐந்து பவுணில் நகை செய்திருந்தான். தாளாத சந்தோஷத்தில் இருந்த ஆனந்தனைத் தீராத சோகம் ஒன்று தீண்டியது.

அன்று மாலை வேலைக்குச் சென்று திரும்பிய ஆனந்தன் 'நீலு... நீலு...' என்று அழைத்தபடியே வீட்டிற்குள் நுழைந்தான். சமயலறையில் யாரோ அழுது கொண்டிருக்கும் சத்தம் கேட்டது ஆனந்தன் திடுக்குற்றான் அடுக்களையைத் தேடி ஓடினான். அங்கே நீலு ஒரு மூலையில் விக்கித்துக் கொண்டிருந்தாள். தன் தமையனைக்கண்டதும் ஒன்றுமில்லாதது போல் எழுந்து "வாண்ணை கொஞ்சம் இரு தேத்தண்ணி ஊற்றித் தாறன்" என்று சமாளித்தாள்.

"நீலு, என்ன நடந்தது? ஏன் உன்ர கண் சிவந்திருக்கு. சொல்லு?" எனப் பரிவுடன் கேட்டான் ஆனந்தன்.

"ஒன்றுமில்லையண்ணை, தூசி கண்ணுக்குள் விழுந்திட்டுது" என்றபடி கண்களைக் கசக்கினாள் நீலு. அவளை உற்றுப் பார்த்த ஆனந்தன் "ஏன் மறைக்கிறாய், உண்மையைச் சொல்லு. நான் உனக்கு என்ன குறை விட்டனான்" என்று நீலுவின் தோள்களைப் பிடித்து உலுக்கினான்.

நீலு குனிந்த தலையுடன் கண்களில் நீர் மல்க "நீ ஒரு குறையும் விடேல்ல அண்ணை, ஆனால் நான் தான்..." என இழுத்தாள் நீலு "என்ன அது சொல்" என வற்புறுத்தினான் ஆனந்தன். கண்ணிலிருந்து நீர் ஓட முகம் வீங்கிச் சிவக்க நீலு சொன்னாள்...

அவள் சொன்னதைக் கேட்ட ஆனந்தனுக்கு உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது தலை சுற்றியது. தன்னுள் கண்ணீர் சிந்தியபடி நின்ற தன் தங்கையின் கண்களைத் துடைத்தவன், "போய் வேலையைப் பார். பயப்பிடாதை, நான் இருக்கிறன்" என்று கூறி விட்டுப்போய் கதிரையில் இருந்தபடி யோசித்தான். என்ன செய்வது? ஒன்றுமே புலப்படவில்லை. பொழுதும் பட்டுவிட்டது. இரவு சாப்பிடவுமில்லை. படுத்துக்கொண்டான்.

அன்றிரவு முழுவதும் யோசித்துக் கொண்டே இருந்தான். தூக்கமே வரவில்லை.

'என்ர தங்கச்சி, ஆமாம் என்னுடைய தங்கச்சி பணக்கார இளைஞன் ராமுவைக் காதலிக்கிறாள். பணக்கார வாலிபன்! ஆமா, இந்த ஊரிலேயே பெரிய பணக்கார வீட்டுப் பையன். தங்கச்சி கலியாணப்பேச்சை எடுக்க தன்னுடைய தந்தையைச் சம்மதிக்க வைக்கச் சொல்லி இருக்கிறாள். இப்பொழுது என்னுடைய தங்கை இரண்டு மாத...'- ஆனந்தனின் உள்ளம் தள்ளாடியது அவனுடைய மனம் துன்பத்தில் துவண்டது.

ராமுவின் தகப்பன் நடராஜன் பணத்தாசை பிடித்த மனிதர். கல்யாணத்திற்குச் சம்மதிக்கவே மாட்டார்.' ஆனந்தனின் இருதயம் ஓயாமல் அடித்துக்கொண்டது. உள்ளம் ஓலம் இட்டது. புரண்டு புரண்டு படுத்தான், நித்திரை வரவில்லை. நாளை நடராஜன் வீட்டிற்குச் செல்ல வேண்டுமென எண்ணிக் கொண்டான்.

பொழுது விடிந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்த ஆனந்தன் நீலு கொடுத்த தேநீரைப் பருகிவிட்டு நடராஜன் வீட்டை நோக்கி நடந்தான். நடராஜன் வீட்டு வாசலில் ஏறும்போதே 'போடா வெளியே என்று தான் சொல்லுவாங்கள்' என்று எதிர்பார்த்த ஆனந்தனை அன்போடு வரவேற்றனர். ஆனந்தனைக் கண்டதும் நடராஜன் 'வாருங்கோ தம்பி, இதில இருங்கோ' என்று கூறிவிட்டு முன்னுக்கிருந்த சோபாவில் உட்கார்ந்தார். ஆனந்தன் தயங்கியபடியே எதிர் சோபாவில் உட்கார்ந்தான். வேலைக்காரன் அவனுக்குக் குளிர்பானம் கொண்டுவந்து கொடுத்தான். நடப்பவைகளைப் பார்த்ததும் ஆனந்தனுக்கு ஆச்சரியமாகவே இருந்தது. ஏதாவது விடயமாக வீட்டுக்கு வந்தால் வெளியில் வைத்தே பதில் சொல்லி அனுப்பும் நடராஜன் இன்று... மௌனமாகவே குளிர்பானத்தைப் பருகிய ஆனந்தனிடம், 'ஆனந்தன் நீர் என்ன விஷயமா...' என்று கேட்டார்

ஆனந்தன், குடித்துக்கொண்டிருந்த குளிர்பானத்தை மேசையில் வைத்துவிட்டு "என் தங்கச்சி நீலுவை உங்க மகன் விரும்புகிறாராம். இப்ப நீலு இரண்டு..." என்று சொல்ல வாயெடுத்தபோதே மேசையில் கையால் அடித்து ஆனந்தனின் பேச்சை நிறுத்திய நடராஜன் "அந்தக்கதையெல்லாம் என்னோட வேண்டாம்" என்றார். ஆனந்தன் அதிர்ச்சியால் சற்றுத் தடுமாறிவிட்டுப் பின் "ஐயா, நீங்க என்ன சொல்லுறீங்க" என மெதுவான குரலில் கேட்டான். "என்ர மகன் ராமுவை பாழ்கிணற்றில் தள்ள நான் தயாராக இல்லை" என்று அலட்சியமாகக் கூறினார் நடராஜன். ஆனந்தன் சிறிது உணர்ச்சிவசப்பட்டு 'எங்கட வீட்டை நீங்க பாழ்கிணறு என்று நினைக்கிறீர்களா?' என வெதும்பியபடியே கேட்டான்

"இல்லை ஆனந்தன், நான் அப்படிச் சொல்லேல்ல. நேற்றுக் கூட ராமுவுக்குக் கலியாணம் பேசிவந்த ஒருத்தர் சொன்னவர், சீதனமா இரண்டு லட்சம் காசு, பிறகு வீடுவளவு நகை எல்லாம் தாறதெண்டு. அதுக்கு என்ர மகன் சம்மதிக்கேலே. ஆனால் நீர் எங்களுக்கு அப்படித் தரவேண்டாம். இரண்டு லட்சம் பணம் தந்தால் காணும்' என்று கூறி இது உம்மால முடியுமா என்று கேட்கும் தோரணையில் இருந்தார் நடராஜன்.

பெருமூச்சுவிட்ட ஆனந்தன் சுற்றுமுற்றும் பார்த்து யோசித்தான். "தம்பி உம்மால் இரண்டு லட்சம் தரேலாட்டிச் சொல்லும். வேற கனை இடத்தில என்ர மகனை நல்ல சீதனத்தோட கேக்கினம்" என்று ஆனந்தனின் முகத்தைப் பார்த்தார் நடராஜன். சீ இவனும் ஒரு மனிசனா என்று மனதிற்குள் நினைத்த ஆனந்தன், "இல்லையில்லை, அப்பிடியொண்டுமில்லை. இன்னும் ஒரு இரண்டு மாசத்தால கல்யாணத்தை நடத்துவம்" என்று கூறிக்கொண்டு தெய்வத்தின்மீது பழியைப் போட்டு- சோபாவில் இருந்து எழுந்தவன் 'அப்ப நான் வாறன்' என்றபடி வீதியில் இறங்கி நடந்தான்.

"எப்படியோ இரண்டு மாதத்துக்குள் இரண்டு லட்சம் தேவை. எப்படித் தேடுவது?' என்று யோசித்தபடி இருந்த ஆனந்தன் ஏதோ சிந்தனையில் தனக்குத் தெரிந்த ஒரு செல்வந்தரின் வீட்டை நோக்கி விரைந்தான்.

அந்தச் செல்வந்தரின் வீட்டை அடைந்த ஆனந்தன் "பெரியவர், எனக்கு ஒரு இரண்டு லட்ச ரூபா தேவை. வட்டி நீங்க எவ்வளவு கேட்டாலும் பரவாயில்லை. இரண்டு வருஷத்தால திருப்பித் தருவன்" என்று கேட்டான். "தம்பி நான் இப்ப பொறுப்பில்லாமல் பணம் கொடுக்கிறேல்ல. அதாவது இரண்டு லட்ச ரூபா என்றால் அதுக்குப் பெறுமதியான நகை தர வேண்டும்" என்றார் செல்வந்தர்.

"பெரியவர் என்னட்டை இப்ப நகை இல்லை உங்களை நம்பித்தான் வந்தனான். நான் வெளிநாடு போய் இரண்டு வருஷத்தில் தந்திடுவன்" என்று கேட்டான் ஆனந்தன். செல்வந்தர் தலையைச் சொறிந்தவாறே யோசித்துவிட்டுச் "சரி தம்பி உன்னில இருக்கிற நம்பிக்கையில நான் காசு தாறன் ஆனால் இரண்டு லட்சத்துக்கும் இரண்டு வருடத்தால ஒரு லட்சம் வட்டிவரும். தகுதியான ஒருவர் பொறுப்பு நிற்கவேணும் என்றார்.

"பொறுப்புக்கு யாரைப் பிடிப்பது? இன்னொரு செல்வந்தன்தானே பொறுப்பு நிற்க வேணும். அப்படி ஒருவன் எனக்குக் கிடைப்பானென்றால் அவனிடமிருந்தே அந்தப் பணத்தைப் பெறலாமே" என்று யோசித்த ஆனந்தனுக்கு, அவன் பழி போட்ட கடவுளே கை கொடுத்தார் அவன் தன்னையும் நம்பவில்லை சுப்பையாவையும் நம்பவில்லை.

சுப்பையாவும் அதே கிராமத்தவர்தான். வயதானவர். குழந்தைகள் இல்லாதவர். மனைவியையும் பத்து வருடத்திற்குமுன் இழந்துவிட்டவர். இதனாலேற்பட்ட விரக்தி காரணமாகவும் தாம் உண்மையாகச் சம்பாதித்த பொருள்களை நல்லவழியில் பயன்படுத்த வேண்டுமென்பதாலும் அந்த ஊரில் இடிந்து கிடந்த கோயிலொன்றைப் புனர்நிர்மாணம் செய்யவும் வேறு நல்ல பணிகளை மேற்கொள்ளவும் சித்தம் கொண்டு இருந்த வேளையில் ஆனந்தன் போய்ச் சுப்பையாவிடம் சரணடைந்தான் தன் வரலாறு முழுக்க எடுத்துரைத்தான். வட்டிக்குப் பணம் தருபவருக்குப் பிணை நின்று எப்படியாவது உதவிசெய்யுமாறு மன்றாடினான்.

சுப்பையர் சிந்தித்தார். அடுத்தநாள் வந்து சந்திக்குமாறு ஆனந்தனுக்குச் சொன்னார்.

அன்று இரவு முழுக்கச் சுப்பையருக்குத் தூக்கம் வரவில்லை ஆனந்தனுக்கும் அப்படித்தான். தன் அண்ணன் தன்னால் இப்படியெல்லாம் கஷ்டப்படுகிறானே என்று நீலு ஒருபுறம் வருந்தி வருந்தி உறக்கத்துடன் போராடினாள். அந்த இரவு இவர்களுக்கு மிக நீளமாயிருந்தது.

பொழுது புலர்கிறது. 'இந்த விடியலா ஒரு மனிசரிட்டைப் போவது என்பதால் சிலமணி நேரங்களை ஒருவாறு ஓட்டித் தள்ளிவிட்டு ஒன்பதுமணிக்கெல்லாம் சுப்பையர் வீட்டு வாயிலில் நின்றான் ஆனந்தன். தன் பேரப்பிள்ளைகளுடன் கூடியிருந்து குறும்புகள் புரிந்து கொண்டிருந்த சுப்பையரின் தங்கை முத்தாச்சி சொன்னாள் சுப்பையர் சுவாமி அறையில் இருப்பதாக. ஆனந்தன் முற்றத்தில் போய் நின்று கொண்டு தன் தெய்வத்தை மனதிற்குள் வேண்டிக்கொண்டான். 'முருகா, என் தங்கையை வாழ வை.'

சுவாமி அறையைவிட்டு வெளியேவந்த சுப்பையர் ஆனந்தனை அன்புடன் அழைத்தார்.

"என்னிடமே பணம் இருக்கும்போது நான் இன்னொருவரிடம் பணம் வாங்கித்தருவதற்குப் பிணை நின்றால் அந்த மனுஷன் என்ன நினைப்பான்? நானே அந்தப் பணத்தைத் தருகின்றேன். வட்டியும் வேணாம் ஒன்றும் வேணாம். ஆனால் உரிய தவணையில் திருப்பித்தந்துவிடவேண்டும்" என்றார் அவர். தர்மமாகவே அந்தப்பணத்தை அவர் கொடுக்க முடிவுசெய்த போதிலும் அவன் மனதிலும் ஒரு பொறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே அவர் அவ்வாறு சொன்னார்.

ஆனந்தனுக்கு தன்னையும் நம்பமுடியவில்லை, சுப்பையரையும் நம்ப முடியவில்லை. ஆனால் அவர் சொன்னது உண்மையேதான்

அவர் ஒரு முடிவுக்கு வந்திருந்தார் ஆமாம் கோவில் கட்டுவதிலும் குமர் கரைசேர்க்கும் பணி மேலானதென எண்ணினார் சொன்னதுபோலவே செய்துவிட்டார். அந்தக் கோவிலில் வைத்து — ஆமாம், அந்தக் கிலமடைந்த கோவிலில் அந்தப்பணம் ஆனந்தனின் கைக்கு மாறியது.

சுப்பையருக்கும் ஆனந்தனுக்கும் நீலுவுக்கும் நடராஜனுக்கும் ராமுவுக்கும் குலதெய்வமான அந்த கோயிலில் - ஆமாம் அந்த முருகன் கோயிலில் நீலு — ராமு திருமணம் நிறைவேறியது அப்போது ஆனந்தனின் கண்களிலிருந்து நீர் மடைவாகப்

(10-ம் பக்கம் பார்க்க)

ஒருவர்:- மகன் வெளிநாடு போனார். ஏதும் அனுப்பினாரா?

மற்றவர்:- முதல் கலர்ப் போட்டோ வந்தது பிறகு கலியாணப் பத்திரம் வந்தது.
இப்ப ஒண்டுமே வாறதில்லை.

கேசரி

தமிழருக்கு என்ன ஆயுள்?

சோதிடத்தில் ஆயுள் பலம்
சொன்னபடி நடக்கும் பலன்
ஆதி முதல் இன்று வரை
அணுவளவு பிசகவில்லை
சோதனைகள் வந்ததையா
சோதிடமும் பிழைத்திடுமோ
வீதியிலே சுட்டு வீழும்
விதத்திற்கும் ஆயுள் என்ன?

சனியனும் மற்றக் கோள்கள்
சார்ந்துள்ள எட்டாம் வீடும்
இனியதாய் தசா புத்திகள்
இருந்திடா விட்டால் பாரில்
மனிதனின் ஆயுள் தன்னை
மாரகம் என்று சொல்வர்
தனியனாய் குழுவாய் மாழும்
தமிழருக் கென்ன ஆயுள்?

—எஸ்.சி.எஸ்.சிதம்பரநாதன்

இந்திய கிரிக்கெட் அணிக்கு இலங்கையில் கிடைத்த அனுபவம்

கிரிக்கெட் விளையாட்டில் வெற்றி தோல்வி முக்கியமானது அல்ல. அது ஒழுங்கு முறைகளின்படி விளையாட வேண்டியதே முக்கியமானதாகும். இது கிரிக்கெட்டை உருவாக்கிய ஆங்கிலேயர் குறிப்பிட்ட கருத்தாகும். எந்த காலத்தில் இந்த விளையாட்டில் பல தவறுகள் நிகழலாம் என்பதனை மனதில் வைத்தே ஆங்கிலேயர் தெரிவித்த இந்த உண்மை அண்மையில் நடந்த இந்திய-இலங்கை கிரிக்கெட் போட்டிகளுக்குப் பொருந்துவதாகவே அமைந்திருந்தது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய அணியின் ஆரம்பமே நல்ல சகுனமாக இருக்கவில்லை இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக அவர்கள் இங்கு வருவதை தமிழ்நாட்டுக்காரர்கள் அவ்வளவாக விரும்பவில்லை. இது தொடர்பாகச் சில ஆர்ப்பாட்டங்களும் நடந்தன ஆனால் விளையாட்டு அரசியலுக்கு அப்பாற்பட்டது என்ற கருத்துக்கு இணங்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பின் பேரில் இந்திய அணி இங்குவந்தது 3 டெஸ்ட் போட்டிகள், 3 ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி மற்றும்ஒரு சில போட்டிகள் இரு அணிகளுக்குமிடையில் நடப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

முதல் ஒருநாள் போட்டி

முதலில் நடந்த ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி நன்கு விறுவிறுப்பாக இருந்தது இந்திய அணியினர் அதில் வென்றனர் தற்போதைய உலக கிரிக்கெட் சாம்பியனான இந்தியா பெற்ற அந்த வெற்றி ஒரு வெற்றியுமல்ல; இலங்கையின் தோல்வி ஒரு தோல்வியுமல்ல என்ற அளவுக்கு இலங்கை வீரர்கள் சிறப்பாக விளையாடியிருந்தார்கள் இப்போட்டியைப் பார்த்த பலரும் அடுத்துவரும் விளையாட்டுகளில் பலத்த போட்டியை எதிர்பார்த்தனர்.

இலங்கையின் முதல் வெற்றி

அடுத்து நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய வீரர்கள் நன்றாக விளையாடியதாகக் கூறமுடியாது. ஆனால் இலங்கை வீரர்கள் ஓரளவு திறமையாக விளையாடியிருந்தார்கள் இலங்கை இப்போட்டியில் வெற்றிபெறும் வாய்ப்பு இருந்தபோதும் கிரிக்கெட்டில் எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்பதற்கு இணங்க அது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது 2 வது டெஸ்ட் போட்டியிலும் இந்திய வீரர்கள் திறமையாக விளையாடவில்லை குறிப்பாகப் பந்து பிடிப்பவர்கள் விட்ட தவறுகளினால் இலங்கை அணி இரண்டு இனிங்ஸிலும் அதிக ஓட்டங்களை எடுத்தது இப்போட்டியில் இலங்கை வெற்றி பெறும் நிலையில் இருந்தபோதும் இந்த வெற்றியைத் தடுத்து இப்போட்டியை வெற்றி தோல்வியின்றி ஆக்கும் ஒரு சந்தர்ப்பம் இந்திய வீரர்களிடம் இருந்தது ஆனால் இந்திய வீரர்கள் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டனர் இதனால் இலங்கை அணி முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் வெற்றியை தட்டிக்கொண்டது. இங்கிலாந்து. பாகிஸ்தான், அவுஸ்திரேலியா. நியூஸிலாந்து இந்தியா ஆகிய நாடுகளுடன் நடந்த 13 டெஸ்டுகளில் காணாத வெற்றியை இலங்கை 14வது டெஸ்டில் பெற்றது. இந்த வெற்றி இலங்கை அரசாங்கத்தினால் ஒருவிடுமுறை தினத்தை உருவாக்கும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஆயினும் இப்போட்டியில் மத்தியஸ்தர்கள் பற்றிய சில கருத்துக்களும் வெளிவந்தன. குறிப்பாக இந்தியவீரர்களை அநேகமாக L B W முறைமூலம் வெளியேற்றியது. அதிலும் இப்போட்டியின் 2வது இனிங்ஸில் இந்தியவீரர்களை 'அவுட்' ஆக்குவதில் இலங்கை [illegible]களைவிட மத்தியஸ்தர்கள் [illegible] செயற்பட்டார்கள் என்பதனையும் மறுப்பது கஷ்டமாகவே உள்ளது

3-வது டெஸ்ட் போட்டி

கண்டி அஸ்கிரிய மைதானத்தில் ஆரம்பமான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் நிலைமை மாறுபட்டிருந்தது. அதாவது இலங்கை வீரர்கள் சிறப்பாக விளையாடிய நிலைமாறி இந்திய வீரர்கள் இதில் சிறப்பாக விளையாடினார்கள். இந்தியா வெற்றிபெறும் என எதிர்பார்த்தபோதும் இலங்கைக் காப்டன் டிலிப் மென்டிஸ், ரோய் டயஸ் ஆகிய இரு வீரர்களின் திறமையான ஆட்டத்தினால் இந்தியா தமது வெற்றியை நழுவவிடும் நிலையும் ஏற்பட்டது எனினும் பின்னர் நிலைமை மாற்றமடைந்து இந்தியா வெற்றி பெறும் நிலை உருவானது. ஆயினும் இறுதியில் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டியின் இறுதி நாளில் 7 விக்கெட்டுக்களை இழந்திருந்த இலங்கை அணி, இறுதிநாளில் போடப்படும் 20 கட்டாய ஓவர்கள் போடப்படுவதனை விரும்பவில்லை. முக்கியமாக இலங்கை வீரர் அஜந்த டிமெல் அதற்கு முழுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். இறுதியில் 13 ஓவர்கள் போடப்பட்டன. மிகுதி 7 ஓவர்கள் போடப்படவில்லை. ஆனாலும் இறுதி 7ஓவர்களும் போடப்படாமல் விளையாட்டு வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்தது உண்மையில் இந்த ஏழு ஓவர்களும் வீசப்பட்டிருந்தால் இலங்கையின் மிகுதி 3 விக்கெட்டுக்களும் வீழ்ந்து இந்தியா வெற்றி பெற்றிருக்கலாம் ஆனால் அத்தகைய ஒரு நிலை இந்திய அணிக்கு வழங்கப்படவில்லை. இதேவேளை இறுதிநேரத்தில் பல L B W அவுட்டுக்கள் இலங்கை வீரர்களுக்கு வழங்கப்படாமல் மத்தியஸ்தர்கள் பாரபட்சமாக நடந்துகொண்டார்கள். ஒரு கட்டத்தில் சிறிகாந்த் தலையில் கை வைத்தார். மனிந்தர் சிங் என்ற சீக்கிய வீரர் குமுறினார் என்ன செய்வது. மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதியானது என்பதினால் இந்தியா தனது வெற்றியை நழுவவிட்டது.

— காவிரி —

இலங்கை வீரர்களின் திறமையோ இந்திய வீரர்களின் குறைபாடோ அல்லது வேறு யாரின் குறைபாடோ இறுதியில் டெஸ்ட் தொடரில் இலங்கை 1—0 என்ற கணக்கில் வென்றது.

அடுத்து நடந்த 2 வது ஒரு நாள் போட்டி மழை காரணமாக 45 ஓவர்களிலிருந்து 28 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. இதில் இலங்கை வென்றது உண்மையில் இந்த வெற்றி இலங்கை வீரர்களின் திறமையை குறிப்பாக ரஞ்சன் மடுகல்லேயின் திறமையை எடுத்துக் காட்டியது.

இந்தியாவுக்கு இழைக்கப்பட்ட அநீதி

இறுதியாக நடந்த 3-வது ஒரு நாள் போட்டி இதுவும் மழை காரணமாக 40 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா குறிப்பிட்ட ஓவர்களில் 194 ஓட்டங்களை எடுத்தது இந்த நிலையில் இப்போட்டியில் 195 ஓட்டங்களைப் பெறுவது சுலபம் என்பதினால் இலங்கையே வெல்லும் எனப் பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் 9 ஓவர்களில் முக்கிய 4 விக்கெட்டுகளை 32 ஓட்டங்களுக்கு இலங்கை இழந்தது. இறுதியில் வெளிச்சம்போதாது என்று இலங்கை ஆட்டக்காரர்கள் கூறியதும் மத்தியஸ்தர்கள் விளையாட்டை நிறுத்தி வெற்றி தோல்வி இல்லை என்று அறிவித்தனர்.

உண்மையில் இந்த மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்திய வீரர்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இலங்கை அணியின் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்த ஒரு நிலையில் இந்த அறிவிப்பு வந்தது. இந்தியாவின் வெற்றியைத் தட்டிப்பறிப்பதாக இருந்தது வெளிச்சம் குறைவு என்பதனை ஏற்றுக்கொண்டாலும் இந்திய அணியினர் ஆடும்போது அவர்கள் தோல்வியில் சென்று கொண்டிருக்கும்போது வெளிச்சம்போதாது என்று இந்திய அணியினர் உண்மையாக கூறியிருந்தாலும் மத்தியஸ்தர்கள் அதனை ஏற்றிருப்பார்களா? இல்லை என்றே பதில் கூறமுடியும்,

இலங்கையின் முன்னேற்றம்

நடந்து முடிந்த இந்திய-இலங்கை கிரிக்கெட் போட்டிகளை நோக்குமிடத்து இலங்கை அணி தமது நிலையில் பெருமளவிற்கு முன்னேறியுள்ளது என்றே கூற வேண்டும் காப்டன் டிலிப் மென்டிஸ், ரோய் டயஸ் ஆகிய இருவரும் சர்வதேச வீரர்களின் இடத்துக்கு வைத்து மதிப்பிடும் அளவுக்கு திறமையுள்ளவர்கள் என்பதனை இப்போட்டிகளில் நிரூபித்துள்ளார்கள். இலங்கையின் நடுத்தரப் பந்து வீச்சாளர்களான சாலியா அஹங்கமா, ரமேஷ் ரத்நாயக்கா ஆகிய இருவரும் சிறப்பாக விளையாடினார்கள். முன்னர் எல்லாம் பல சாதனைகள் செய்த அஜந்தா டிமெல்லினால் இப்போட்டிகளில் சோபிக்க முடியவில்லை டெஸ்ட் போட்டிகளில் இடம் பெறாத போதும் இரண்டு ஒரு நாள் போட்டிகளில் விளையாடிய தமிழ் வீரரான வினோதன் ஜோன் தான் இலங்கையின் முதல்தர பந்து வீச்சாளர் என்பதனை இந்த இருபோட்டிகளிலும் திறமையாக விளையாடி நிரூபித்துள்ளார்.

ஒருநாள் போட்டியில் திறமையுள்ள இந்தியா

இந்திய வீரர்களைப் பொறுத்த வரை டெஸ்ட் போட்டிக

(12 ம் பக்கம் பார்க்க)

பகவானின்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காணேயோ?'' ஏழைக் குசேலருக்குக் கண்ணன் காட்டிய பரிவு; விலைமகளுக்குப் புத்தர் காட்டிய அன்பும் ஒருசேரத் தோன்றுகின்றன அல்லவா?

அவன் தர்க்க ரசகுல்லாக்களையும், அவற்றில் இழைந்திருந்த அன்பையும் சேர்த்துச் சுவைத்த ஸ்ரீராமகிருஷ்ணர், அவனை மீண்டும் தாயின் அருள் பார்வையால் ஆசீர்வதித்துவிட்டுத் தம் அறைக்குத் திரும்பினார்.

பதிலாக அவன்தன் இதயத்தையே காணிக்கையாக்கினான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

— பிரம்மசாரி சுந்தர சையன்யா

வானொலி...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

யவும் இதே அலை வரிசையே பயனுடையது. இந்த அலை மலை, காடு. மரம். கட்டடம் ஆகியவற்றால் தடைபடுத்தப்பட்டுவிடும் கடற்பரப்பினால் இதன் வலிமை அதிகரிக்கும் இதனாலேயே சென்னை வானொலி நிலையத்தின் விசேடமான பண்பலை ஒலிபரப்பு மாலை ஆறுமணி முதல் யாழ்ப்பாணத்தில் கேட்கக் கூடியதாயுள்ளது.

சிற்றலை வரிசை உலக முழுவதும் கேட்கக்கூடியது என முன்னரே கூறினோம். உலக முழுவதும் அநேக சிற்றலை நிலையங்கள் உள்ளன. அமெரிக்கா, லண்டன், மாஸ்கோ, பீகிங், மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், டெல்லி, பாகிஸ்தான் முதலாய பல நிலையங்களின் ஒலிபரப்புக்களை சிறப்பாகச் சிற்றலையில் செவி மடுக்கலாம். இவை தமிழ், ஆங்கிலம் மற்றும் பல மொழிகளில் ஒலிபரப்புகின்றன. பொழுது போகாதவர் ஒரு சிற்றலை வானொலியை வைத்துத் திருகிக்கொண்டிருந்தால் நாளடைவில் எந்தெந்த நிலையம் எந்தெந்த நேரம் ஒலிபரப்பை மேற்கொள்கிறது என்று இலகுவாகக் கண்டுபிடித்து விடுவார். பற்றறி போட்டு ரேடியோக் கேட்பவர் கவனம் பற்றறி விரைவில் இறங்கிவிடும். மத்திய அலைவரிசையில் திருச்சி நமக்கு மிக அண்மையில் இருப்பதனால் வெகு சுலபமாகக் கேட்கமுடிகின்றது. மத்திய அலைவரிசையில் வானொலி கேட்பது மிகவும் சுலபம். வானொலி இப்பொழுது வாழ்க்கையில் மிக மிக அத்தியாவசியமான கருவியாக மாறிவிட்டது. அதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது உங்கள் கைகளிலேயே தங்கிஉள்ளது

சிறுகதை

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

பாய்ந்தது அது ஆனந்தக் கண்ணீர்தான். நீலுவின் கண்களில் வழிவது தன் கழுத்திலே தாலி ஏறிய மகிழ்ச்சி சுப்பையரும் கண்ணீர் சொரிகின்றார், தான் ஒரு ஏழைக் குமரைக் கரைசேர்த்த மகிழ்ச்சி.

அந்தக் முருகன்கோயில் இப்போதெல்லாம் பென்னம் பெரிய கோபுரத்துடன் நிமிர்ந்துநிற்கிறது எல்லாம் அந்த முருகன் செயல்தான்.

நடராஜன் உணர்வு பெற்றதன் பலன்தான் கோவிலில் இந்த மாற்றம்

சுப்பையர் நடராஜன் கண்களைத் திறந்துவிட்டார்.

இப்போது நடராஜனின் கண்களும் நீர் பனிக்கின்றன-அந்த வடிவேலனைப் பார்த்து.

[யாவும் கற்பனை]

ஆசிரியர் திலகம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு ஏற்ற முறையில் படிப்பிக்கும் திறமை கொண்டவர்.

இவர் காலத்துக்குக் காலம் தோன்றும் புது நூல்களையும் கட்டுரைகளையும் தாமே படித்துச் சுவைத்து மாணவர்களுக்கு அவ்வப்போது புதுப புதுக் கருத்துக்களை வழங்கி வந்தார். புத்தகக் கடைகளில் இவரைக் காணாதவர் உண்டோ?

ஆசிரியர் ஒருவரின் கடமைகளோ பல. பண்டிதர் அவர்கள் 1946, 1951, 1960 ஆகிய ஆண்டுகளில் நிதியின் பொருட்டுக் கல்லூரி நடத்திய காணிவேல்களில நுழைவாயிற் சீட்டுக்களைப் பெறும் பெரும் பொறுப்பினை ஏற்றமை குறிப்பிடத்தக்கது. ஏழு மைல் தொலையிலிருந்து நாடோறும் பேருந்து வண்டியில் வருவரெனினும் ஒரு நாளெனினும் காலந் தாழ்த்திக் கல்லூரிக்கு வந்தார் அல்லர் ஆசிரியர்க்கு உரித்தான லீவு பல நாட்களெனினும் இவர் கல்லூரிக்கு வராத நாட்கள் இல்லை எனலாம் மணியடித்ததும் கணக்கமின்றித் தன் வகுப்பிற்குச் சென்று விடுவார். ஆசிரியர் இளைப்பாறும் அறையிலும் தொடர்ந்து தம் ஆசிரியர் பணிக்கு வேண்டியவற்றையே செய்துகொண்டிருப்பார்.

இவர் மாணவர், ஆசிரியர், பொது மக்கள் ஆகியோருடன் இன் முகத்துடனும் இன்சொல்லுடனும் பழகுபவர். இவரிடம் கோபக் குறியைக் காண்பது அருமை நேர்மை, இரக்கம், எளிமை, தன்னடக்கம், கடமையுணர்ச்சி, அறிவு வேட்கை, இறைபக்தி, ஆசிரியத் தொழிலின் அடங்காப் பற்று முதலிய பல நல்லிலக்கணங்களுக்கு இலக்கியமாய் விளங்குகிறார் ''வேதனம் போதாது'' என்று ஓலமிடும் கட்சியையோ தகாத முறையில் பதவியேற்றம் பெறும் கட்சியையோ சாராது நடுநின்று கடமையாற்றி வந்தார். பழியை நாணுபவர்

இத்தகைய குணநல மிக்க என் ஆசிரியப் பெருந்தகை இளைப்பாறியது யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னார் தம் இளைப்புற்ற வாழ்க்கையை எக் குறையுமின்றி நடத்தல் வேண்டுமென எல்லாம் வல்ல பேராதனைக் குறிஞ்சிக் குமரனை வேண்டுகின்றேன்.

கலங்காதீர்

இப்பொழுது நடைபெற்று வருவது கலியுகம், ஆனால் மனபரிபாகம் அடைந்தவர்களுக்கு இந்தக் கலியுகமே கிருதயுகமாய் விடுகின்றது. உலகில் நிகழ்கின்ற அக்கிரமங்களைக் குறித்து யாரும் மனக் கலக்கமடைய வேண்டியதில்லை. - தர்மசக்கரம்

ஆற்றுமா? ஆற்றுதா?

புதிர் அவிழ்கிறது

(1)



கப்பல் இன்னக்கப்பல்
கொப்பித்தாள் கப்பல்!

(2)

கட்டைத்தம்பி நடைவண்டி
குட்டித்தம்பி அசல்தம்பி!

— சத்தியசிலன்

* கப்பல்' என்ற
சிறுவர் புதிர்க்கவிதை நூலிலிருந்து

இன்று

பாலர் கலைவிழா

[யாழ்ப்பாணம்]

காரைநகர் பாலர் பாடசாலைகள் கலைவிழா இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணி தொடக்கம் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயத்தில் அதிபர் திரு. செ. தேவதாசன் தலைமையில் நடைபெறும். உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

லிபேர்ட்டி மினி

10-30, 2-30,
4-45, 7-00

TORSO

பயங்கரம், திகில் கொலை
வயதுவந்தவர்கள், மட்டும்

உஷா மினி

10-30, 2-30, 4-45, 6-45

Soldier

றொக்கட் லோஞ்சரால் தகர்க்கப்படும் வாகனங்கள், துப்பாக்கி சண்டைகள், கார் ஓட்டங்கள், பனிச்சறுக்கல்கள்.

ஸ்ரான்லி மினி

[illegible] திரையில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30

TanzaniaIsland

தன்னை வளர்த்த பெண்ணிடமே அட்டூழியம் புரியும் ஒரு ராட்சத மனிதக் குரங்கின் கதை பார்க்கத் தவறாதீர்கள்.

எம்பயர்

7 அடித் திரையில்
(வைத்தீஸ்வரா சந்தி)
தினசரி 10-30, 2-30,
6-30, இரவு 9-00
சிவகுமார், சரிதா, ஜீவிதா
நடித்த

'சுகமான ராகங்கள்'

பயங்கரச் சண்டைகள்.
இனிய பாடல்கள் நிறைந்த
படம்.
(புதிய வெளியீடு)

சரவணபவன் மினி சினிமா

(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-15, 4-30, 7-00
Harri son Foro..... in

RAIDENS OF THE LOST ARK

(மறைந்த பொக்கிசத்தை
தேடுபவர்கள்)
பயங்கர சண்டைகள்
நிறைந்த
திகில் . [illegible] . மர்மம்

வெலிங்டன்

10-30, 2-30, 6-30,
பாக்கியராஜ்- அம்பிகா
நடித்த

அந்த ஏழு நாட்கள்

லிடோ சினிமா

10-30, 2-30, 6-30
3-வது மாதமாக
ஓடுகிறது!
தியாகராஜன்,
பானுசந்திரன்,
பூர்ணிமா ஜெயராம்,
சில்க்ஸ்மிதா, ஜெய்சங்கர்
நடித்த
பாலு மகேந்திராவின்

நீங்கள் கேட்டவை

[illegible]

நன்றி நவிலல்

19-8-85ல் நடைபெற்ற எங்கள் விவாகப் பதிவு வைபவத்திற்கு; நல்வாழ்த்துக்கள் நல்லாசிகள் வழங்கி ஆசீர்வதித்து சிறப்பித்த அனைவருக்கும், எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர்: கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலை

வைத்திய கலாநிதி: ''நிர்மலா வைத்தியசாலை'' 784/2, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்

திரு திருமதி (டாக்டர்) கு இரத்தினேஸ்வரன்

972

31ம் நாள் நினைவஞ்சலி

அமரர் பூ. முத்துக்குமாரு

அவர்கள்

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)



தோற்றம்:
25-8-1924

மறைவு:
30-8-1985

திதி:
29-9-1985

எங்கள் வாழ்வுக்கு அயராது உழைத்து மேல்நிலை அடையச்செய்த குலவிளக்கே! நும் திடீர் மறைவு எங்களை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. தங்கள் நினைவு என்றும் எங்கள் உள்ளத்தை விட்டகலாது. தங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகன், மருமகள்

''சித்திரமேழி''
இளவாலை.

964

31ம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி கிரியையும்

இராஜரட்ணம் விஜயரட்ணம்

(உரிமையாளர்: இராஜநாயகி படமாளிகை, காங்கேசன்துறை)

தோற்றம்:
23-12 1939
மறைவு:
1-9-1985

வாழ்நாளில் துன்பம் என்னவென்று அறிந்திலோம். துயர் காணோம் என்று இறுமாந்திருந்தோமே! சீரும், சிறப்பும், சிரிப்பும், கலகலப்புமாய் எம்மை வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே, உங்கள் பிரிவால் உலகம் எமக்கு இருட்டாய் தெரிகின்றதே? வெளிச்சத்தை காண்பதெப்போ? உங்கள் புன்சிரிப்பையும், நீங்கள் அள்ளிச் சொரிந்த அன்பையும், பாசத்தையும், இப்பிறவியில் எம்மால் மறக்கத்தான் முடியுமா?

30 9-85 திங்கட்கிழமை காலை 8-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, சபிண்டி கிரியைகளில் பங்குபெறும்படி உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இப்படிக்கு
மீளாத்துயரத்தில் ஆழ்ந்திருக்கும்
மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்

கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
971

தேவை

பண்ணை உதவியாளர்

AGRICULTURAL FIELD ASSISTANT

கிளிநொச்சி ஷாலோம் நகரில் அமைந்திருக்கும் மிஷன் அபிவிருத்திப் பண்ணைக்கு உதவியாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விவசாயப் பாடசாலைப் பயிற்சி உடையவர்களுக்கும், பண்ணை அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்படும். ஒக்டோபர் மாதம் 20-ம் திகதிக்கு முன்னதாக கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

அருட்திரு. டீ. எஸ். தியாகராசா,
முகாமையாளர்,
844 தென் இந்திய திருச்சபை, கிளிநொச்சி.

வேலையாட்களுக்கு

வெற்றிடம்

கொழும்பு சாமுவேல் அன் கம்பெனியினரின் நிர்வாகத்தில், அமைக்கப்பட்டு வரும் மன்னார் நீர்விநியோகத்திட்டத்தில் பணிபுரிவதற்கு பின்வரும் பதவிகளில் வெற்றிடமுண்டு.

★ தச்சுவேலை செய்பவர்கள்

★ மேசன் வேலை செய்பவர்கள்

நேர்முகப்பரீட்சையின்பின், தகுதிகாண் நிலையில் வேலைக்கு அமர்த்தப்படுவர். நேரில் வரவும்

நிர்மாண முகாமையாளர்
சாமுவேல் அன் கம்பனி,
(தண்ணீர் தொட்டி நிர்மாணப்பகுதி),
நீர்விநியோக தொட்டி நிர்மாண வேலைத்தலம்,
983 மன்னார்.

ஓட்டல்

சீவம்ஸ்

கொழும்பில் எல்லா வசதிகளுடன் தங்குவதற்கு நியாய வாடகையில் அறைகள் கொடுக்கப்படும்.

தொடர்பு:

சீவம்ஸ் எக்ஸ்போட்ஸ்

19, சங்கமித்த மாவத்த,

கொழும்பு - 13.

தொலைபேசி : 26522.

(977)

3/4 இஞ்சி 1/2 இஞ்சி வெள்ளைக்கல் விநியோகத்திற்கான கேள்வி

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சபை

இம்மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான், மாங்குளம், தணுக்காய் என்ற இடங்களில் அமைந்துள்ள பெருந்தெருத் திணைக்கள வேலைத் தளங்களுக்கு 3/4'', 2''. இயந்திரத்தினால் உடைத்த வெள்ளைக் கற்களை, விநியோகிக்க விரும்புபவர்களிடமிருந்து கேள்விகள் கீழ்குறிப்பிட்டுள்ளவரினால் கோரப்படுகின்றன.

விநியோகிக்க விரும்புவோர் மேற்கூறப்பட்ட இடங்களில், எவ்விடத்திற்கு, எவ்வளவு தொகையான கற்களை விநியோகிக்க முடியுமென்பதையும், ஒரு கியூப் கல் விநியோகத்திற்கு எதிர்பார்க்கும் விலை என்ன என்பதையும், ஒரு வாரத்தில் எவ்வளவு கியூப் கற்கள் விநியோகிக்க முடியுமென்பதையும் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட இடங்களில் கற்கள் விநியோகிக்கப்படல்வேண்டும்.

கேள்விகள் கீழ்க்குறிப்பிட்டவருக்கு 04-10-85க்கு முன்னர் கிடைக்கப்பெறல்வேண்டும். கேள்விக் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் ''வெள்ளைக் கற்களுக்கான கேள்வி'' என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

கல் விநியோகம் ஒக்டோபர் மாதம் 2ம் கிழமையிலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும்.

கேள்விகளில் ஒன்றினையோ, அல்லது ஒரு பகுதியினையோ, அல்லது முழுவதையுமோ ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு.

ச. பொன்னம்பலம்,
அரசாங்க அதிபரும், மாவட்டச்
செயலாளரும்,
மாவட்ட அபிவிருத்திச் சபை, முல்லைத்தீவு.
அபிவிருத்திச் செயலகம்,
முல்லைத்தீவு.
967

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

போர்நிறுத்தம் தொடர்பாக விரிவான உடன்பாடு?

[சென்னை]

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி சென்னையில் தமிழ்க் குழுக்களுடனும், கொழும்பில் இலங்கைத் தலைவர்களுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து இலங்கையில் இடைக்காலப் போர்நிறுத்த ஒப்பந்தம் சம்பந்தமாக விரிவான உடன்பாடு ஒன்று ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

புதுடில்லியில் அடுத்தவாரம் திரு. ரொமேஷ் பண்டாரியை சந்தித்து மீண்டும் ஒருசுற்றுப் பேச்சுவார்த்தையை தமிழ்க் குழுக்கள் நடத்தவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சாதாரண அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்ப் போராளிகள் குழுக்கள் சென்னையில் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க இலங்கையில் உத்தேசிக்கப்பட்டுள்ள மாகாணசபைகளின் கீழ் இயங்கும் பொலிஸ் இலாகாவில் குறைந்தது எட்டுசதவீதம் தமிழர்கள் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் இலங்கை தமிழ் மக்களுக்கு ஒரு பந்தோபஸ்து உணர்ச்சி ஏற்பட தமிழ் மக்கள் பெரும்பாலும் வாழும் பகுதிகளிலிருந்து இந்தப் பொலிஸார் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்று இந்தியா இலங்கை அரசிடம் தெரிவித்திருப்பதாக அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(த)

கலை நிகழ்ச்சிகளுடன்— பாதயாத்திரை தொடர்கிறது!

(எம். ரி சந்திரகுமார்)

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சிறையில் வாடும் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து நடாத்தும் 8 நாள் திட்டமிடப்பட்ட பாதயாத்திரையின் வேறு நாளாகிய நேற்று பாதயாத்திரை பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலிருந்து ஆரம்பமானது.

நீதிவிசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை விடுதலைசெய் அல்லது விசாரணை செய் எனக்கோரி பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு மாணவிகள் முன்னே செல்ல, மாணவர்கள் அவர்களைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர்.

பாதயாத்திரை செல்லும் வழிதோறும் பொதுமக்களும், பொது ஸ்தாபனங்களும் பாதயாத்திரையாளருக்கு ஆதரவு வழங்கிய வண்ணமிருந்தனர். நேற்று விடுமுறை தினமாகையால் சிறுவர்கள், சிறுமிகள் உட்பட பல்வேறு பொதுமக்களும் பாதயாத்திரையுடன் இணைந்து சென்றுகொண்டிருந்தனர். இதனால் பாதயாத்திரையாளர்களின் தொகை 300க்கும் மேலாக அதிகரித்ததோடு அவர்கள் அணி அணியாகக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் சென்று கொண்டிருந்தார்கள்.

செல்லும் வழியில் பலவிடங்களில் பல்கலைக்கழக கலாசாரக் குழுவினர் வில்லுப்பாட்டு, தெருக்கூத்து உட்பட பல கலைநிகழ்ச்சிகளை நடத்திச் சென்றனர்.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் ஆரம்பித்த பாதயாத்திரை பண்டத்தரிப்பு, கிளாலி, அளவெட்டி கிராமங்களினூடாகச் சென்று, மாலை ஐந்து மணியளவில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியை அடைந்தது. அங்கு இரவைக் கழித்த பாதயாத்திரையினர் பல்வேறு கலைநிகழ்ச்சிகளை நடத்தினர்.

பாதயாத்திரையின் 4வது நாளாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை பாதயாத்திரை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் இருந்து ஆரம்பித்து, தெல்லிப்பளை, காங்கேசன்துறை வீதி, மல்லாகம், ஏழாலை ஆகிய கிராமங்களினூடாகச் சென்று குப்பிளானை அடையும். (ச)

இந்திய...

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

ளுக்கு தற்போதைய அணி பொருத்தமில்லை என்பதனை உணர்த்தியுள்ள போதும் மொகிந்தர் அமர்நாத், கவாஸ்கர் போன்றோரின் அனுபவமிக்க திறமையான ஆட்டங்களை இப்போட்டிகளில் காணமுடிந்தது. ஆயினும் ஒரு நாட்போட்டிகளில் இந்தியா தமது நிலையில் இருந்து குறைந்து விட்டதாக கருத இடமில்லை. குறிப்பாக இந்திய வீரர்கள் ஸ்ரீகாந்த் அசாருதீன், வெங்சர்க்கார், ரவி சாஸ்திரி, சேத்தன் சர்மா, கபில்தேவ், கவாஸ்கர் உட்பட பலரும் ஒரு நாள் போட்டிகளில் திறமையாக விளையாடியுள்ளார்கள். இதனால் இந்தியா இலங்கையிடம் டெஸ்ட் போட்டிகளில் தோற்றாலும் ஒரு நாள் போட்டிகளை உள்ளடக்கிய சர்வதேசப் போட்டிகளில் இந்தியா தொடர்ந்து உலக சாதனைகளை பெறும் வாய்ப்பே காணப்படுகிறது குறிப்பாக இந்திய வீரர்கள் அனைவரும் ஒருநாள் போட்டி விளையாடுவதிலேயே வல்லவர்களாக உள்ளனர் இந்த அணியில் உள்ள பலரும் இளம் வீரர்களாக இருப்பதினால் அவர்களுக்கு நல்ல டெஸ்ட் அனுபவம் தேவைப்படுகிறது

ஊர்ப்பெயர் ஆராய்ச்சி:

இலக்கிய நெஞ்சங்களே!

தகவல்களை உடன் கொடுத்துதவுங்கள்

இடப்பெயர் ஆராய்ச்சி உலக நாடுகளில் இன்று ஓர் முக்கிய ஆய்வுத்துறையாக வளர்ந்து வருகின்றது. ஈழத்து நாட்டார் வழக்கியலில் ஆய்வுசெய்து கலாநிதிப் பட்டம் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள், இப்போது மாவட்ட அடிப்படையில் ஈழத்து ஊர்ப்பெயர்கள் பற்றிய ஆராய்ச்சியிலீடுபட்டு, அதுபற்றிய ஆய்வுநிலையில் பூர்த்திக்கட்டத்தை எட்டியிருக்கின்றார்

வாசகர்களே! ஊர்களின் பெயர்கள், அவ்வூருடன் தொடர்புடைய கதைகள், சம்பவங்கள், வரலாற்றுச் செய்திகள், அறிஞர், புலவர் குறிப்புகள், ஊர்ப்பழமொழிகள், (உ+ம்; வந்தாரை வாழவைக்கும் கந்தரோடை,) ஆகிய தகவல்கள் உடனடியாகத்தேவைப்படுகின்றன ஆய்வு நூலில் உங்கள் ஊரும் அதன் புகழும் இடம்பெறவேண்டாமா? ஆர்வத்துடன் இவ் ஆய்வுப் பணிக்குக் கைகொடுத்து உதவுங்கள் உங்கள் தகவல்களைப் பின்வரும் முகவரிக்கு உடனே அனுப்பிவையுங்கள்.

கலாநிதி இ பாலசுந்தரம்,
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி

988

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி. 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 4180

இன்று கூட்டம்

[யாழ்ப்பாணம்]

அடகு வைத்தோர் சங்கத்தின் விசேட நிர்வாக சபைக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்க காரியாலயத்தில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்திற்கு நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்கும்வண்ணம் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

(ச)

ஒரு குடும்பமே ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுச் சனிக்கிழமை காலை ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்த சாட்டி என்ற இடத்தில் இச் சோகச்சம்பவம் இடம்பெற்றது.

இறுதிக் கிரியைகளை ரெலோ இயக்கம் பொறுப்பேற்று நடத்தியது.

இறந்த குடும்பத்தினர் விபரம் வருமாறு: ஐ. மதியாபரணம் (35 வயது), மனைவி நாகேஸ்வரி (28 வயது), பிள்ளைகள் அனிசா (6 வயது), வனிசா 5 வயது), கிருபாகரன் (4 வயது), கிரிஜா (2 வயது)

நேற்றுக் காலை சுமார் ஆறு மணிக்குச் சாட்டியிலுள்ள தனது தகப்பனாரின் வீட்டிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதாக மனைவியுடனும் பிள்ளைகளுடனும் மதியாபரணம் புறப்பட்டதாகவும் சுமார் ஏழு மணிக்கு அவ்வீட்டிலிருந்து இரு மைல் தொலைவில் நான்கு குழந்தைகளும் தாயும் மதியாபரணமும் பிணமாகக் காணப்பட்டதாகவும் தெரிய வருகிறது. இவர்கள் இறந்து கிடந்த இடத்தில் நச்சுத்திரவப்போத்தலும் 15 பக்கங்களை கொண்ட கடிதமொன்றும் கண்டெடுக்கப்பட்டது.

வறுமை காரணமாகத்தாம் இம்முடிவுக்கு வந்ததாகவும், சாப்பிடுவதற்கு உணவில்லையென்றும், உடுப்பதற்குத்துணி இல்லையென்றும், கடன்வேறு துன்பம் தருவதாகவும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது மதியாபரணமும் மனைவி நாகேஸ்வரியும் அக்கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்

தமது சடலங்களை ரெலோ இயக்கம் பொறுப்பேற்று இறுதிக் கிரியைகளை நடத்துமாறும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது

இறந்த மதியாபரணம் திருட்டு முதலான பல் குற்றச் செயல்களில் ஈடுபட்டு இயக்கங்களினால் எச்சரிக்கப்பட்டிருந்ததாகவும் அதன் பின்னரும் திருட்டுச் சம்பவமொன்று சம்பந்தமாகத் தேடப்பட்டுவந்தாரென்றும் கூறப்படுகிறது.

கிளிநொச்சியில் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடுத்தெருவில் பொதுமக்களை நிறுத்திவைத்து இம்சைப்படுத்தினர். ஆயுதப்படையினரும் ஊர்காவல் படையும் கூட்டுச்சேர்ந்து மக்களை அச்சுறுத்துகின்றனர்; அகதிகளாகி வெளியேறும் மக்கள் தொகை நாளுக்குநாள் அதிகரிக்கின்றது

400 க்கு மேற்பட்ட மக்கள் கிளிநொச்சியில் அகதிகளாகி கிராமமுன்னேற்றச் சங்கக் கட்டடத்தில் அடைக்கலம்.

(மா)

இலங்கைத்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

டார், 'துக்ளக்' சஞ்சிகை திரு பண்டாரியின்மறுப்பைக் கீழ்க்கண்டவாறுவெளியிட்டுள்ளது.

விடுதலைஇயக்கங்களின் பிரதிநிதிகளை 'பிளடிஃ பெலோஸ்' என்று அழைத்ததாகப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி முழுமையான கட்டுக்கதை இந்தமாதிரியான வார்த்தைகளையெல்லாம் நான் தவறிப் போய்க்கூட பிரயோகிப்பது கிடையாது. இந்தக்குற்றச்சாட்டுக்கள் வெறும் கற்பனை

'ரொமேஷ் பண்டாரி சிங்களவர்கள் சரியாக செயல்படுகிறார்களா? என்ற கேள்விக்கு "மகாநாட்டுமேசையில் சந்திக்கும்போது நம்முன் எடுத்து வைக்கப்படும் வாதங்களைச் சந்திக்கின்றோம். அதற்கு எதிரான வாதங்களை எடுத்துவைக்கிறோம். சார்பு எதிர்ப்பு என்ற பதங்களுக்கெல்லாம் இடமில்லை நான் ஒரு தேசபக்தன் என்று நானே சான்றிதழ் எனக்கு வழங்கிக்கொள்ள நான்விரும்பவில்லை'' என்று திரு பண்டாரி பதிலளித்தார்.

தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் திரு அ அமிர்தலிங்கத்தின் பேச்சுவழக்குப் பற்றியும் திரு பண்டாரி கருத்து வெளியிட்டார் அவர் தெரிவித்ததாவது.

''அயல்நாட்டுத் தூதுவர்களையும் மற்றைய ராஜதந்திரிகளையும் ''யுவர் எக்ஸலென்ஸி'' என்று அழைக்கும் பழக்கத்தைத் தவிர்க்க முயற்சிப்பது தான் வெளிவிவகார அமைச்சகத்தில் எமக்கவழக்கமாக இருந்தவருகிறது. சாதாரணமாக மிஸ்டர்... என்று அழைப்பதே போதுமானது அமிர்தலிங்கம் ஒரு பக்குவப்பட்ட அரசியல்வாதி, அவருடைய அன்புகாரணமாக அவர் ''யுவர் எக்ஸெலென்ஸி' என்று அழைத்தால் அதுமாதிரி செய்யக்கூடாதென அவரிடம் செல்வது சரியென இருக்காது. என்றார்.

(செ)

ஈ. தே. வி ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்கொள்வதாகவும் ஈ தே. வி. மு. பேச்சாளர் தெரிவித்தார்.

மூன்றாவது கட்ட சமரசப் பேச்சுக்கள் புதுடில்லியிலேயே நடைபெறும்என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை போர்நிறுத்த மேற்பார்வைக் குழுவில் தாங்கள் சமர்ப்பித்த 20 பேர்களில் குறைந்தது ஐந்துபேராவது இடம்பெறவேண்டும் என்று சென்னையில் இந்திய வெளியுறவுசெயலரை சந்தித்த ஈழத் தேசிய விடுதலை முன்னணியினர் தெரிவித்தனர்.

இச்சந்திப்பின்போது இந்திய உயர் ஸ்தானிகர் திரு டிக்சிற்றும் சமூகமளித்திருந்தார்

போர்நிறுத்த மேற்பார்வை குழுவில் தாங்கள் சமர்ப்பித்தவர்களில ஐவர் இடம்பெற வேண்டுமென்ற ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் கோரிக்கையை திரு. டிக்சிற், இலங்கை அரசின் கவனத்திற்கு கொண்டுவருவதாக எனக்கூறப்படுறது.

மாவட்ட பிரஜைகள் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படும் பட்சத்தில் அதில் இந்த ஐவரும் சேர்க்கப்படக்கூடாது என்றும், ஈழதேசிய விடுதலை முன்னணியினர் வலியுறுத்தியுள்ளனர்.

என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு. அ அமிர்தலிங்கம், ஆர். சம்பந்தன், திரு. வே. யோகேஸ்வரன் ஆகியோர் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய திரு ரொமேஷ் பண்டாரியிடம் கூறியுள்ளார்கள்.

சிபார்சு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாக சிறைச்சாலைக்குகொண்டு வந்தபின்பே 18 மாதகாலம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக தெரியவருகிறது

மரண அறிவித்தல்

இளையதம்பி வேலுப்பிள்ளை

மண்டைதீவு 6ம் வட்டாரத்தைச் சேர்ந்த இளையதம்பி வேலுப்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசலஷ்சுமி, காலஞ்சென்ற இராஜரத்தினம், அன்னலஷ்மி. பாக்கியலஷ்சுமி நாகலஷ்சுமி உப தபாலதிபர் மண்டைதீவு), அம்பலவாணர் (விசுவமடு), குலசிங்கம் (விசுவமடு), இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 12-00 மணியளவில் மண்டைதீவு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்,

(989)